# முன்னேற்ற அறிக்கை

# 2015

**தேசிய கல்வி நிறுவகம்**

**மகரகம**

# தேசிய கல்வி நிறுவகம்
# முன்னேற்ற அறிக்கை – 2015

## 1.0 அறிமுகம்

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவகம் கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

(அ) இலங்கையில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்விக்கு ஏற்பாடு செய்தல், அதனை மேம்படுத்தல்.

(இ) கல்வி முறைமையின் நிறைவேற்றுகை, இலக்குகள், அமைப்புகள், உள்ளடக்கம், முறைமையியல் என்பன உட்பட கல்வி முறைமையின் மீதும், கல்வியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் மீதுமான கற்கைகளை நடாத்துதல், மேம்படுத்துதல்.

(ஈ) கல்விசார் நோக்கங்களுக்காகத் தொழினுட்பவியலின் இசைவாக்கம் உட்பட, கல்வி முறைமையில் புத்தாக்கப் பயில்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல்.

(உ) கல்வி முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர் தொழில் தகைமையையும் முகாமைத்துவத் தகைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(ஊ) கல்வித் துறையின் நிபுணத்துவ சேவைகளை அரசாங்கத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தல்.

(எ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல்.

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்துச் செயற்படல்.

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை முறைமையினது கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வித் துறையில் ஈடுபட்டவர்களினது வாண்மை விருத்தி, கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாக விருக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன்படி உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் தலைமைத்துவத்திற்கான வாண்மை தேர்ச்சிகளை பாடசாலை முறைமைக்கு வழங்கி, விஞ்ஞான ரீதியிலான தகவல் களை வழங்கக்கூடிய ஆய்வுகளுக்காக வழிகாட்டல் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்க வசதியளிக்கின்றது.

இலங்கையில் தற்போதுள்ள கலைத்திட்டக் கொள்கைகளுக்கு அமைவாக கலைத்திட்ட மறுசீரமைப்பானது 8 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும். 2005 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கலைத்திட்டமானது 2010 ஆம் ஆண்டில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் தற்போதுள்ள கலைத்திட்டம் பகுத்தாராயப் பட்டு உறுதியான அடித்தளங்களினூடாக இற்றைப்படுத்தப்பட்ட கலைத்திட்டமாக 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள கலைத்திட்டத்தைப் பகுத்தாராய்ந்து அதனை முழு நிறைவான கலைத்திட்ட மொன்றாக மாற்றியமைப்பதே இதன் பிரதான நோக்கமாகும்.

(1) பாடசாலை முறைமையில் ஒவ்வொரு குழுவினரோடு தொடர்புபட்ட கலைத்திட்ட ஆய்வுகளை அமுல்படுத்தி தகவல்களை வெளிப்படுத்தல்.

(2) பல்வேறுபட்ட சமூகக்குழுக்களினது சார்புடைய கருத்துக்களையும் ஆலோசனை களையும் வெளிப்படுத்தல்.

(3) கலைத்திட்ட அமுல்படுத்தல், விருத்தி செய்தல் தொடர்பில் பல்வேறுபட்ட நாடு களினது வெற்றிகரமான அனுபவங்களை பகிர்தல்.

(4) ஒவ்வொரு பாடப் பரப்பிற்குள்ளும் முழுமைப்படுத்தப்பட்ட புத்தறிவினையும் கற்பித்தல் முறைமைகளையும் சேர்த்துக் கொள்ளல்.

2015 ஆம் ஆண்டிற்குரிய கலைத்திட்ட அமுல்படுத்தலையும் பகுத்தாய்வும் 6 மற்றும் 10 ஆம் தரங்களுக்குரிய கலைத்திட்டத்தை பாடசாலைகளில் அமுல்படுத்துபவனவற்றைக் கண்காணித்தல் மற்றும் இரண்டாம் கட்டமாக 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்காக 1, 7 மற்றும் 11 ஆம் தரங்களுக்குரிய ஆசிரியர் வழிகாட்டிகளை மாகாண பயிற்றுனர் களைப் பயிற்றுவிப்பதற்காகத் தயாரித்தல்; அத்தோடு 2018 ஆம் ஆண்டில் கலைத் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2, 8 மற்றும் 12 தரங்களுக்குரிய பாடத்திட்டத்தைத் தயாரித்தல்.

கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து கலைத்திட்ட நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் பாடசாலை கல்வி முறைமையைப் பரிமாற்று வதற்கான அறிவு கேந்திர செயற் திட்டத்தினூடாகவும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத் தினூடாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள நிதி வரையறைகளினால் திறைசேரியினால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதி நிறுவக ஊழியர்களின் சம்பளங்களுக்காகவும் எஞ்சிய நிலுவை தொகை நீர், மின், சுகாதார மற்றும் பாதுகாப்பு கட்டணங்களுக்காக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பல்வேறு பாடநெறிகளின் வருமானத்தைப் பயன்படுத்துவதனூடாகவும் நிறைவேற்றிக் கொள்ளப்படு கின்றது. எவ்வாறாயினும் நிறுவகத்தினால் விசேடமாக நடாத்தப்படும் பாடநெறிகளானவை இலாபமீட்டுவதனை நோக்காக கொண்டவையல்ல. அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணங் களானவை வேறு நிறுவகங்களினால் அதை ஒத்த பாடநெறிகளுக்கு அறவிடும் கட்ட ணத்தை விட ஒப்பீட்டளவில் குறைவானவையாகும். 2015 ஆம் ஆண்டில் தேசிய கல்வி

நிறுவகம் 219 054 670 ரூபாவை மீண்டெழும் செலவினமொன்றாக சம்பளமல்லாத தொகை யினை செலவிட்டிருந்தது. இதில் 52% தேசிய கல்வி நிறுவக வருமானங்களிலிருந்து ஈடுசெய்யப்பட்டதாகும். கீழ்க் காட்டப்படும் அட்டவணை 2015 ஆம் ஆண்டின் செலவினத் தகவல்களைத் தருகின்றது.

2015 இல் நிறுவகத்தின் செலவினம் பற்றிய தகவலை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| **நிதிமூலவளம்** | **நடைமுறைச் செலவினம்** | | **மூலதனச் செலவினம்** | |
|---|---|---|---|---|
| | **மீள்பார்த்த ஒதுக்கீடு** | **உண்மைச் செலவினம்** | **மீள்பார்த்த ஒதுக்கீடு** | **உண்மைச் செலவினம்** |
| திரண்ட நிதி | 338 000 000 | 337 710 405 | 282 000 000 | 57 729 712 |
| TSEP | 30 000 000 | 28 114 054 | 14 000 000 | 12 457 393 |
| DFAT | 22 500 000 | 22 105 730 | 14 500 000 | 13 754 323 |
| வருமானம் (தே.க.நி) | 123 016 000 | 112 841 719 | 5 000 000 | 4 609 475 |
| ESDP | 49 100 000 | 49 039 623 | 900 000 | - |
| UNICEF | 2 790 000 | 2 225 746 | - | - |
| இலங்கையின் கொரிய தூதரகம் | 338 000 | 112 950 | - | - |
| கொரியாவின் UNESCO இற்கான தேசிய ஆணையகம் | 2 500 000 | 2 454 555 | - | - |
| **மொத்தம்** | **568 244 000** | **554 604 782** | **316 400 000** | **88 550 903** |

2015 இல் நிகழ்ந்த இலங்கையின் ஆட்சி மாற்றத்துடன் இணைந்ததாக தேசிய கல்வி நிறுவகம் 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து தேசிய அளவிலும் சர்வதேச மட்டத்திலும் புகழ் பெற்ற ஒரு நிர்வாகியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த மாற்றத்திற்கு ஒத்ததாக நிறுவகத்தின் செயற்பாடுகள் தேசிய மட்டத்தில் மேலும் வினைத்திறன் மிக்கதாக விளங்குவதை உறுதிப்படுத்த மனித மற்றும் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதன் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. ஆனாலும் நிறுவகமானது, 2015 இல் அதன் நிர்வாக மட்டத்தில் தீர்க்க முடியாதவாறான பின்வரும் முதன்மைக் காரணி களால் பல்வேறு பின்னடைவுகளை எதிர்நோக்கவேண்டியேற்பட்டது.

- பாராளுமன்ற சட்டத்தின் பிரகாரம் நிறுவகத்தின் செயற்பாடுகளை அமுல்நடத்துவதற் கென வழங்கப்படும் என ஒப்புக் கொள்ளப்பட்ட நிதி ஒதுக்கீட்டை நிறுவகம் பெற்றுக் கொள்வதில் தாமதத்தை எதிர்நோக்கியிருந்தது. இதன் ஒருபுறமாக இலக்கு வைக்கப் பட்ட நோக்கங்களை அடைவதில் பிரதானமான தடைக்கல்லாக இருந்தது. உத்தி யோகத்தர்களின் பற்றாக்குறை முக்கியமாக கல்விசார் உத்தியோகத்தர்கள் கிடைக் காமல் போனது இரண்டாவதான மோசமான தடைக்கல்லாகும்.

- நிறுவகத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமனப்பட்டியலில் ஒரு உத்தியோகத்தரின் இளைப்பாற்றலால் வெற்றிடமாகும் இடத்தை நிரப்ப முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி தேவையாயிருந்தது.
- நிறுவகத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனப்பட்டியலில் பெரும் எண்ணிக்கையில் வெற்றிடங்கள் இருந்தாலும், பொருத்தமான, தகைமையுள்ள, அனுபவம்மிக்க தனிநபர் கள், நிறுவகத்தின் தற்போதைய சம்பளக் கொடுப்பனவு கவர்ச்சிகரமானதாக இல்லை என்ற காரணத்தால் விண்ணப்பம் செய்யத் தயக்கம் காட்டுகிறார்கள்.

பாராளுமன்றத்தின் சட்டப் பிரகாரம் ஒப்புக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அமுல் நடத்துவதில் இருந்த ஏராளமான கடினத்தன்மையின் மத்தியிலும் மிகுந்த அர்ப்பணிப்போடு பணிபுரியும் தற்போதைய உத்தியோகத்தர்கள் வெற்றிகரமாகச் செயற்பட முடிந்தது. 2015 இல் ஏற்றுக் கொள்ளப்பட்ட 652 நியமனப்பட்டியல் உத்தியோகத்தர்க்குரிய வெற்றிடங்களில் 188, 2015 இல் நிரப்பப்படா மல் இருந்தது. 2015 இன் ஆரம்பத்தில் நிறுவக உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை பற்றிய தெளிவான விபரத்தைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

| பதவி | 01-01-2015 இன்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் | 01-01-2015 இன்படி பணியில் உள்ள உத்தியோகத்தர்கள் | | | 01-01-2015 இன்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1. பணிப்பாளர் நாயகம் | 01 | 01 | 00 | 01 | 00 |
| 2. மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 | 00 | 00 | 00 | 01 |
| 3. பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 06 | 02 | 01 | 03 | 03 |
| 4. பணிப்பாளர் | 27 | 11 | 06 | 17 | 10 |
| 5. சபைச் செயலாளர் (கல்வி) | 01 | 00 | 00 | 00 | 01 |
| 6. சிரேஷ்ட விரிவுரையாளர் / சிரேஷ்ட கல்வியாளர் | 72 | 25 | 13 | 38 | 34 |
| 7. விரிவுரையாளர் / கல்வியாளர் | 75 | 23 | 25 | 48 | 27 |
| 8. உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியாளர் | 90 | 21 | 29 | 50 | 40 |
| 9. கல்விசாரா உத்தியோகத்தர் | 379 | 144 | 163 | 307 | 72 |
| **10.மொத்தம்** | **652** | **227** | **237** | **464** | **188** |

நிறுவகத்தின் 08 உறுப்பினர்களின் இளைப்பாறலும், புதிய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதிலுள்ள கடுமையான நடைமுறையும், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும், நிறுவகத்தின் ஆக்கத்திறனின் தரத்தைப் பாதித்துள்ளது. இந்த நிலையை மோசமடையாமல் குறைக்கும் வண்ணம் மிகப் பெரிய அர்ப்பணிப்போடும் கடமையுணர்ச்சியோடும் பணியாற் றும் தற்போதைய பணியாளர்களின் சேவை காரணமாக தேசிய கல்வி நிறுவகத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான உண்மையான குறிக்கோள்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட காரணிகளுக்கப்பால், 2015 ஏப்ரலில் நிறுவகத்திற்கு ஒரு புதிய பணிப்பாளர் நாயகம் நியமனம் செய்யப்பட்டபோதும், நிறுவகத்திற்கான பேரவை ஒன்றினை நிறுவுவதற்

குச் சில காலம் எடுத்ததால், பேரவையின் அனுமதி கிடைக்காத காரணத்தால் பாடசாலை களுக்கு ஆசிரியர் வழிகாட்டி நூல்கள், ஏனைய பாடத்திட்ட ஆவணங்களை நேரத்திற்கு வழங்க முடியாமல் போய்விட்டது.

இருந்தபோதிலும், மேற்கூறப்பட்ட பின்னடைவுகளுக்குள்ளும், நிறுவகத்தின் உத்தியோகத்தர் கள் அதிக வினைத்திறனுடன் செயற்பட்டு, நிறுவகத்தின் எல்லாச் செயற்பாடுகளையும் நேரகாலத்திற்கு அமுலாக்கினர். 2015 இல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நபர்களான பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் சுமார் 9 500 பேர் நிறுவ கம் நடத்திய பல்வேறு பாடநெறிகளில் பங்குபற்றினர்.

## 2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

### 2.1 2015க்கான பேரவை

தேசிய கல்வி நிறுவக சட்டப் பிரமாணங்களுக்கு ஏற்புடைய விதத்தில் பேரவை பின்வரும் அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

- ஒழுங்கு விதிகளினால் குறித்துக் கொடுக்கப்பட்ட நியமங்களுக்கான திட்டத்திற்கான செயற்பாடுகளுக்கமைய நிறுவனத்தின் உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் சேவைகளுக்கான கால அளவு மற்றும் நிபந் தனைகள், நாட்கூலிகள், சம்பளம் அல்லது ஏனைய ஊதியங்களைத் தீர்மானித்தல்.
- ஒழுங்குக் கட்டுப்பாடு சம்பந்தமான விடயங்களில் விதிகளை ஆக்குதல்.
- நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் நன்மைக்கான சேமலாப நிதியத்தை ஒழுங்கு செய்தலும் அமைத்தலும் அத்துடன் அவ்வாறான நிதியங்களுக்கு அல்லது திட்டத் திற்கு பங்களிப்புச் செய்தலும்.

தேசிய கல்வி நிறுவகச் சட்டதிட்டங்களின்படி, நிறுவகத்திற்கு நிதியைக் கையாளும் மற்றும் நிர்வாகத்தை நடத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு பேரவையில் பின்வரும் உறுப்பினர்கள் சேவையாற்றினார்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. உபாலி மாரசிங்க<br>(செயலாளர், கல்வியமைச்சு) | - | தலைவர்<br>(02-04-2013 முதல் 27-08-2015 வரை) |
| 2. | திரு. W. M. பந்துசேன<br>(செயலாளர், கல்வியமைச்சு) | - | தலைவர்<br>(11-09-2015 முதலாக) |
| 3. | பேராசிரியர் குணபால நாணயக்கார<br>(பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்) | - | உறுப்பினர்<br>(02-04-2015 முதலாக) |
| 4. | பேராசிரியர் S. சந்திரசேகரம்<br>(முன்னாள் பீடாதிபதி, கல்விப்பீடம்<br>கொழும்புப் பல்கலைக்கழகம்) | - | உறுப்பினர் |

5. கலாநிதி T. A. பியசிரி - உறுப்பினர்
(உபவேந்தர், தொழில்சார்
தொழில் நுட்ப பல்கலைக்கழகம்)

6. திரு. Y. L. M. நவவி - உறுப்பினர்
(சிரேஷ்ட உதவிச் செயலாளர்,
உயர் கல்வி அமைச்சு)

7. திருமதி. K. A. H. C. பூபுடுசிறி - உறுப்பினர்
(உதவிப் பணிப்பாளர்,
தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்,
நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு)

8. பேராசிரியர் W. D. W. ஜயதிலக - உறுப்பினர்
(பேராசிரியர், இரசாயனத் திணைக்களம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)

9. கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிரி - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூக விஞ்ஞான பீடம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

10. பேராசிரியர் ஜயதேவ உயங்கொட - உறுப்பினர்
(கொழும்புப் பல்கலைக்கழகம்)

11. கலாநிதி அமல் ஹர்ஷா த சில்வா - உறுப்பினர்
(பணிப்பாளர், சுகாதாரக்கல்வி மற்றும்
பகிரங்கப்படுத்தல் அலுவல்கள் திணைக்களம்,
கொழும்பு – 07)

12. செல்வி. மனிக்யா கொடித்துவக்கு - உறுப்பினர்
(விரிவுரையாளர், மொழிகள் துறை,
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

13. செல்வி. V. D. C. P. பெரேரா - பேரவைச் செயலாளர்
(பணிப்பாளர், வெளியக மூலவள
முகாமைத்துவ அலகு, தேசிய கல்வி நிறுவகம்)

## 2.2 கல்விசார் விவகாரங்கள் சபை 2015

பேரவையை விட கல்விசார் விவகாரங்கள் சபையானது, கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் ஏனைய பொருத்தமான துறைகளின் நிபுணர்களைக் கொண்டுள்ளது. இது அனைத்து கல்விசார் விவகாரங்கள் மற்றும் கல்விசார் மற்றும் நிறுவனம்சார் தலைமைத் துவம், மேற்பார்வை, அத்துடன் பின்வரும் செயற்பாடுகள் / விவகாரங்கள் என்பவற்றுக்கும் பொறுப்பாக உள்ளது.

- எல்லா கல்விசார் விடயங்களுக்கும் பேரவைக்கு ஆலோசனை வழங்கல்.
- பேரவையினால் முன்வைக்கப்படும் எந்த விடயத்திற்கும் கவனம் செலுத்தலும் அறிக்கையிடலும்.
- நிறுவகம் நடத்துகின்ற அல்லது நிறுவகத்தில் நடக்கின்ற கற்றல் தொடர்பான பாட நெறிகள், பயிற்சி நிகழ்ச்சி / நிகழ்ச்சிகள் மற்றும் பரீட்சைகள் பற்றி பேரவைக்கு சிபார்சுகளும் அறிக்கையும் வழங்குதல்.
- கற்றல் பாடநெறிகள், பயிற்ச நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவகத்தால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகள் என்பவற்றிற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு தேவை யான குறித்த சிபார்சுகளை பேரவைக்குத் தெரிவித்தல்.
- கற்றலுக்கான பாடநெறிகள் சார்ந்த ஒழுங்கு விதிகளை வரைந்தும், கற்பித்தல் நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் மற்றும் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகள் என்ப வற்றுக்கான விதிகளை வரைந்தும் அவ்வித வரைபுகளை பேரவைக்குச் சமர்ப்பித்தல்.
- நிறுவகத்தால் நடாத்தப்படும் பரீட்சைகளின் பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்த மான பேர்களின் பெயர்களை பேரவைக்குச் சிபார்சு செய்தல்.
- கண்காட்சிகளுக்கான விருதுகள் மற்றும் ஏனைய பரிசில்கள், புலமைப்பரிசில்கள், பதக்கங்கள் மற்றும் பரிசில்கள் என்பவற்றைப் பெறத் தகுதியான பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவர்களின் பெயர்களை பேரவைக் குச் சிபார்சு செய்தல்.
- பேரவையின் அனுமதியோடு, சபை உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனையவர்களை உள்ள டக்கும் குழுக்களை நியமித்தல்.

பின்வரும் கல்விசார் நிபுணர்களை, கல்விசார் விவகாரங்கள் சபை 2015 இல் கொண் டிருந்தது.

| | | |
|---|---|---|
| 1. | பேராசிரியர் W. ஆரியதாச த சில்வா<br>(முன்னாள் பீடாதிபதி, கல்விப்பீடம்,<br>கொழும்புப் பல்கலைக்கழகம்) | - தலைவர்<br>(03-03-2015 வரை) |
| 2. | கலாநிதி M. A. உபாலி மாம்பிட்டிய | - தலைவர்<br>(21-07-2015 இலிருந்து) |

3. பேராசிரியர் W. M. அபேரத்ன பண்டார - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம், தே.க.நி) (06-01-2015 வரை)

4. திரு. S. U. விஜேரத்ன - உறுப்பினர்
(பதிற் பணிப்பாளர் நாயகம், தே.க.நி) (03-04-2015 வரை)

5. பேராசிரியர் குணபால நாணயக்கார - உறுப்பினர்
(பணிப்பாளர் நாயகம், தே.க.நி) (02-04-2015 இலிருந்து)

6. பேராசிரியர் நாரத வர்ணசூர்ய - உறுப்பினர்
(முன்னாள் உபவேந்தர், (03-03-2015 வரை)
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)

7. திரு. R. S. மெதகம - உறுப்பினர்
(இளைப்பாறிய பணிப்பாளர் நாயகம், (03-03-2015 வரை)
கல்வி மறுசீரமைப்பு அமுலாக்கல் பிரிவு, கல்வியமைச்சு)

8. திரு. W. M. N. J. புஷ்பகுமார - உறுப்பினர்
(பரீட்சைகள் ஆணையாளர்,
தேசிய மதிப்பீடு மற்றும் பரீட்சைகள் சேவை)

9. திரு. V. முத்துக்குமாரசுவாமி - உறுப்பினர்
(முன்னாள் அதிபர், இந்துக்கல்லூரி,
கொழும்பு - 04)

10. திரு. திஸ்ஸ ஹேவாவிதாரண - உறுப்பினர்
(கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம்,
கல்வி அமைச்சு)

11. பேராசிரியர் சுதந்த லியனகே - உறுப்பினர்
(பீடாதிபதி, விஞ்ஞான பீடம், (03-03-2015 வரை)
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)

12. திரு. L. M. D. தர்மசேன - உறுப்பினர்
(ஆணையாளர், கல்விக் கல்லூரி, கல்வியமைச்சு)

13. கலாநிதி பிரியந்த பிரேமகுமார - உறுப்பினர்
(செயலாளர், பல்கலைக்கழகங்கள்
மானியங்கள் ஆணைக்குழு)

14. திரு. E. K. கனிகிகம - உறுப்பினர்
(சமூகவியற் திணைக்களம், (21-07-2015 இலிருந்து)
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்)

15. கலாநிதி R. U. ஹல்வத்துற - உறுப்பினர்
(குடிசார் பொறியியல் திணைக்களம், (21-07-2015 இலிருந்து)
மொறட்டுவ பல்கலைக்கழகம்)

16. கலாநிதி மாஹிம் மென்டிஸ் - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் பீடம், (21-07-2015 இலிருந்து)
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்)

17. பேராசிரியர் R. அரங்கல - உறுப்பினர்
(பேராசிரியர், சிங்களத் துறை, (21-07-2015 இலிருந்து)
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்)

18. கலாநிதி பிரசாத் விமலரத்ன - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், கணனிப் பாடசாலை, (21-07-2015 இலிருந்து)
கொழும்புப் பல்கலைக்கழகம்)

19. கலாநிதி M. T. M. மஹீஸ் - உறுப்பினர்
(சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியற் திணைக்களம்,
கொழும்புப் பல்கலைக்கழகம்)

20. திரு. M. F. S. P. ஜயவர்த்தன - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்)

21. வண. கலாநிதி மாபுல்கொட சுமணரத்ன தேரர் - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானிடவியல் மற்றும்
சமூக விஞ்ஞானங்கள் பீடம்)

22. திரு. B. சனத் பூஜித - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
ஆய்வு மற்றும் திட்டமிடல் பீடம்)

23. பேராசிரியர் P. C. P. ஜவ்பர் - உறுப்பினர்
(பிரதிப் பணிப்பாளர் நாயகம், (03-03-2015 வரை)
மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி)

24. திரு. N. V. A. S. சமரசிங்க - உறுப்பினர்
(உதவிப் பணிப்பாளர் நாயகம், (30-07-2015 முதல்)
மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்வி)

25. செல்வி. V. D. C. P. பெரேரா - கல்வி விவகாரங்கள்
(பணிப்பாளர், சபையின் செயலாளர்
வெளியக மூலவள முகாமைத்துவ அலகு, தே.க.நி)

பேரவையினதும், கல்விசார் விவகாரங்கள் சபையினதும் வழிநடத்தல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தேசிய கல்வி நிறுவகமானது பின்வரும் ஒழுங்கமைப்புக் கட்டுமானத்தின் கீழ் தன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

## 2.3 பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகம், பரீட்சைகள் துறை, உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வெளியக மூலவள முகாமைத்துவ அலகு என்பன பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்படுகின்றன. பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம் பேரவையினதும், கல்விசார் விவகாரங்கள் சபையினதும் நடவடிக்கைகளைக் கூட்டிணைக்கிறது. சென்ற வருடத்தின்போது 08 பேரவைச் சந்திப்புக்களும், 12 கல்விசார் விவகாரங்கள் சபையின் சந்திப்புக்களும் மற்றும் ஒரு இணைந்த சந்திப்பும் நடைபெற்றன. உள்ளகக் கணக்காய்வு அலகு, உள்ளகக் கணக்காய்வினைப் பொறுப்பாகக் கொண்டுள்ளதுடன் முகாமையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிப்படுத்தல் என்பவை வலுப்பெற உதவியுள்ளது.

வெளியக மூலவள முகாமைத்துவ அலகானது, வெளிநாட்டு / கடல்கடந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைப்பதற்குப் பொறுப்பாக உள்ளது.

பின்வருபவை 2015க்கான அடைவுகளாகும்.

- கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்ற குறுகிய கால வெளிநாட்டுக் கற்கைச் சுற்றுலாக்களுக்கு 17 உத்தியோகத்தர்களை ஒழுங்கு பண்ணியது.

- மலாயாப் பல்கலைக்கழகத்தில் அப்பல்கலைக்கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன் படிக்கையின் பிரகாரம் 03 கல்விசார் உத்தியோகத்தர்கள் முதுமாணிப் பட்டப் படிப்பை மேற்கொள்ள வாய்பேற்படுத்தியது.
- ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலகவங்கியின் நிதியளிப்பின் மூலம் மலேசியா வின் முகாமைத்துவ விஞ்ஞானப் பல்கலைக்கழகத்தில் 10 கல்விசார் உத்தியோகத்தர் கள் கலாநிதிப் பட்டப் படிப்பைத் தொடர வசதியளிக்கப்பட்டுள்ளது.

## 2.4 பீடங்களும் பிரிவுகளும்

2015 இல் நிறுவகத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பில் எவ்வாறு வேறுவேறு துறைகளும் அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது கீழே தரப்பட்டுள்ளது.

### 2.4.1 மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

- முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித் துறை
- சிங்கள மொழித் துறை
- தமிழ் மொழித் துறை
- ஆங்கில மொழித் துறை
- அழகியற் கல்வித் துறை
- சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை
- சமூக விஞ்ஞானங்கள் துறை

### 2.4.2 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பீடம்

- விஞ்ஞானத் துறை
- கணிதத் துறை
- தொழில்நுட்பத் துறை
- வணிகத் துறை
- தகவல் தொழில்நுட்ப மற்றும் கல்வி முகாமைத்துவ தகவற் முறைத் துறை
- சுகாதார மற்றும் உடற்கல்வி அலகு
- அச்சிடல் மற்றும் பிரசுரித்தற் துறை

### 2.4.3 ஆய்வு மற்றும் திட்டமிடல் பீடம்

- திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டுத் துறை
- ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை

### 2.4.4 கல்வித் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவக் கல்விப் பீடம்

- தொழிற்றகைமை அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை
- கல்வி நிர்வாகம் மற்றும் அபிவிருத்தித் துறை
- வெளிநாட்டுப் பாடநெறிகள் அலகு

### 2.4.5 மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப் பீடம்

- உள்ளடக்கக் கல்வித் துறை
- பாரம்பரியக் கல்வி/வெளிநாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித் துறை
- இலத்திரனியற் பரவல் துறை
- வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் அலகு
- திறந்த பாடசாலை அலகு
- ஆசிரியர் கல்வித் துறை
- நிறுவக அபிவிருத்தித் துறை

### 2.4.6 நிர்வாகம், நிதி மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள் பிரிவு

- நிர்வாக மற்றும் மனித வளத் துறை
- நிதித் துறை
- பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை
- வாசிகசாலை மற்றும் தொல்பொருட்கள் துறை
- போக்குவரத்து அலகு

## விசேட நிகழ்ச்சிகள் 2015ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தின் அடைவுகள்

வருடாந்த அமுலாக்கல் திட்டம் (AIP) 2015 இல் உள்ளடக்கப்பட்ட பாடத்திட்ட அபிவிருத்தி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், வருடாந்த அமுலாக்கத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத தொழில் சார் அபிவிருத்திக் கல்வி ஆராய்வு அத்துடன் மேலதிக பாடத்திட்ட செயற்பாடுகள் முதலானவை 2015 இல் தேசிய கல்வி நிறுவகத்தில் அமுலாக்கப்பட்டிருக்கிறது.

- விளம்பிலுள்ள குழுக்களின் கல்வித் தேவைகள் பற்றி பணிபுரிதல்களுக்கும் அர்ப் பணிப்புச் செய்ததன் அடிப்படையில் அதனது அடைவு மட்டத்தை பாராட்டி 2015 UNESCO King Sejong Literacy விருது, தேசிய கல்வி நிறுவகத்திற்கும் வழங்கப் பட்டது.
- 20 ஆண்டுகளுக்கு முன் ஜப்பான் அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட கட்டடத்தொகுதியின் விரிவுரை மண்டபங்கள், நவீன துணைக்கருவிகள் மற்றும் சாத னங்கள் அமைக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டது.
- நிறுவனத்தின் ஊழியர்களை நியமனஞ் செய்யும் விடயத்தில் அலுவலக முகாமைத் துவம் சம்பந்தப்பட்ட விடயங்கள் சார்பான தொடர் விரிவுரைகளின் அமுலாக்கலில்

தகுதியுடையவர்கள் ஆரம்பத்தில் தொழிலாளர்களாகவும், அலுவலக உதவியாளர் களாகவும் நியமிக்கப்பட்டனர்.

- உத்தியோகத்தர்களின் நலனோம்பலைக் கருத்திற் கொண்டு நிறுவகத்தில் ஒரு வைத்திய சிகிச்சை நிலையத்தை நிறுவுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- நிறுவகத்தின் (2016 – 2020) ஐந்தாண்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு, கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாரா உத்தியோகத்தர்கள் அனைவரதும் அபிப்பிரா யங்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டமொன்று அமுலாக்கப்பட்டது.
- ஜேர்மன் கைத்தொழில் ஒத்துழைப்பு முன்னெடுப்பின் கீழ், சிங்களம் / தமிழ் என்ப வற்றை இரண்டாம் மொழிகளாக கற்பித்தல் தொடர்பான கற்றல் - கற்பித்தல் ஏற்பாடு களின் வசதிக்கான ஒலி – ஒளி நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரித்து அவைகளை பாட சாலைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அழகியற் பாடங்களான நடனம், கீழைத்தேய சங்கீதம், ஓவியம் மற்றும் நாடகம் அத்துடன் அரங்கியல் என்பவற்றைக் கற்பிக்கும் வசதிக்கான செயல்முறை விளக்கங்களை உள்ளடக்கி 12 விதமான இறுவட்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 3.0 பாடத்திட்ட அபிவிருத்தி

நாட்டின் பொதுவான கல்வி சார்ந்த விடயங்கள் யாவற்றிற்கும் மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான அத்துடன் விஞ்ஞான தொழில்நுட்ப பீடங்களே பொறுப்பானவை. 65 செயற்றிட்டங்கள் 2015 இல் அமுலாக்கப்பட்டன. பின்வரும் கடமைகள், மொழிகள் பீடம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய பீடங்கள் அத்துடன் இரு மொழிகள் மற்றும் பாரம்பரிய மொழிகள் துறைகள் என்பனவற்றில் மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப் பீடத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டன.

மேற்கண்ட பீடங்களின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு:

- சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருந்தக் கூடிய பாடத்திட்டத்தைத் திட்டமிட்டு, அபிவிருத்தி செய்து நவீனமயப்படுத்தல்.
- பாடத்திட்டத்தைப் புதிய முறையில் அமைப்பதற்கான, கருத்துள்ள செயல்முறைக் கற்றல் கற்பித்தல் செய்முறைக்கான புதிய நுணுக்கங்களைப் பாடசாலைகளுக்கு அறிமுகஞ் செய்தல்.
- பாடத்திட்டத்தின் செயற்பாடுகளை விருத்தி செய்தல் மற்றும் அமுலாக்குதல் என்ப வற்றில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்சார் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- பாடத்திட்ட அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் சம்பந்தமான தகவல்களை வெளிப் படுத்தும்முகமான கல்வியின் தரம் பற்றிய முன்னேற்றத்திற்குப் பங்களிப்புச் செய்யும் கற்கைநெறிகளை அமுலாக்கல்.

- கற்றல்-கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் வெற்றிக்காக புதிய முறை யியல்களை அறிமுகம் செய்தல்.
- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தேசிய, சர்வதேச மொழிகளில் மாண வர்க்குத் தேர்ச்சியை விருத்தி செய்தல்.
- சுகாதாரம் மற்றும் இயற்கை மரபுரிமை என்பவற்றைப் பாதுகாத்துக் காப்பாற்ற மாண வர்களுக்கு தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- சமூகத்தில் உள்ள பல்வேறு இனக் குழுமங்களின் மொழி வேறுபாடுகள், சமய, கலா சாரப் பெறுமதிகள் பற்றி மாணவர்களின் தேர்ச்சியை விருத்தி செய்தல்.

2015 ஆம் ஆண்டில் பாடத்திட்ட அபிவிருத்தியின் சார்பாக பின்வரும் பணிகள் அமுலாக்கப் பட்டுள்ளன.

- தரம் 3, 9, 12/13க்கான 75 பாடத்திட்டங்களும், தரம் 1, 8, 12 ஆகியவற்றுக்குரிய ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்விக்கான ஆசிரியர் வழிகாட்டிகள் 78ம் தயா ரிக்கப்பட்டுள்ளன.
- கலை, பரதநாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், நடனம், மேற்கத் தைய சங்கீதம் மற்றும் நாடகம், அரங்கியல் (சிங்களம் / தமிழ்) என்பவை, தரம் 7 மற்றும் 11 என்பவற்றுக்கு 16 மூலவள நூல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் நடைபெறும் க.பொ.த.(சா/த) பரீட்சையில் மாணவரின் செயற்றிறனை அதிகரிக்கும் நோக்கில் க.பொ.த. (சாதாரண தரம்) இற்கான செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.
- விஞ்ஞானம் தரம் 10 மற்றும் 11க்கான பரிகார நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாடு களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக ஒரு மதிப்பீட்டு முறை தயாரிக்கப் பட்டது. அத்துடன் சிந்தனையைக் கிளறக்கூடிய 40 மதிப்பீட்டாளர்க்கான அமர்வுகள் நடாத்தப்பட்டன.
- சிங்களத்திலும் தமிழிலும் தரம் 9, 10 மற்றும் 11 இற்கான 45 உதவிகரமான வினாப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன. அவை தரம் 10 மற்றும் 11 இற்கான கணிதத்தின் கற்றல்- கற்பித்தலை முன்னேற்றும் விதத்தில் அமைந்தன.
- 3 முதல் 5 வருடங்கள் என்னும் நியம வயதின் அடிப்படையில் குழந்தைக்கான முன்பருவக் கல்விக்கு பாடத்திட்ட அமைப்புச் சட்டவரைபு தயாரிக்கப்பட்டது.
- மொழிகள், கணிதம் மற்றும் தரம் 1 இற்கான சூழல் சார்பான நடவடிக்கைகளுக்கான விசேட கல்விக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிக் கைந்நூலின் இறுதி வரைபு தயாரிக்கப்பட்டது.
- தேசிய கல்வியற் கல்லூரிகளில் கல்வி இளமாணிப் பட்டப்படிப்பிற்காக 31 பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன.

**பாடத்திற்கான பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோ சகர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்போருக்கான பகுத்தறிவுக் கோட்பாட்டுப் பாடத் திட்டம் சார்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் அமுலாக்கல்.**

தற்போதைய பாடத்திட்ட சுழற்சியின் பிரகாரம், 2016 இலிருந்து புத்தமைக்கப்பட்ட தரம் 1, 7 மற்றும் 11 ஆகியவற்றின் பாடசாலைகளின் தொகுதி, விழிப்புணர்வு ஏற்பாட்டுக்கான செயலினை அமுலாக்கலுக்கான திட்டங்கள் கொண்டதாக உள்ளது. இந்த வகையில் பாடத்தின் பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு செப்டம்பர் 2015 இற்கு முன்பாக அமுலாக்கத்தைப் பூர்த்தியாக்க வேண்டும் என்ற மாகாண மட்டத்தில் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்குப் பின்னரும் கூட, தேசிய கல்வி நிறுவகம் முந்திய நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்க வேண்டியிருந்தது. இவ்வாறாக, தேசிய கல்வி நிறுவகமானது பாடப்பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களாக மொத்தம் 9 500 பேருக்கு விழிப்புணர்வை வழங்கக்கூடியதாயிருந்தது. இதனால் எல்லா மாகாணங்களும், வலயங்களும் பயன் பெற்றன.

**கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தியும் முகாமைத்துவமும்**

கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நபர்களின் முகாமைத்துவ மற்றும் தலைமைத்துவ திறமை களை ஊக்குவிப்பதே மீப்பேயில் அமைக்கப்பட்டுள்ள தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பிரதான பணியாகும். இது ‘‘கல்வித்துறையில் ஈடுபடும் நபரின் தொழில்சார் மற்றும் முகாமைத்துவ தேர்ச்சியினை விருத்தி செய்தல்’’ எனும் சட்டவிதியின்படியானதாகும்.

மேற்குறித்த பணியை அடைவதற்கு, பீடத்தினால் கல்வி முகாமைத்துவம் மற்றும் பாட சாலை நிர்வாகம் சார்ந்த விடயங்களை டிப்ளோமா மட்டத்திலிருந்து முதுமாணி மட்டம் வரை கொண்டு செல்ல பல்வேறு பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டவற்றுடன் கூட, பீடமானது இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) அலுவலர்களுக்காகக் குறுகியகால பாடநெறிகளை நடத்துகிறது. அத்துடன் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்படும் புதிய உறுப்பினர்களுக்கென விசேடமாக வடிவமைக்கப்பட்ட நீண்டகால தொடக்க நிலைப் பாடநெறிகளையும் நடத்துகிறது.

பாடப்பொருள் சார்பான பாடநெறிகள் 2015 இல் இப்பீடம் நடத்தியது. இப்பாடநெறிகள் கல்வி முகாமைத்துவம் மற்றும் கல்வி முகாமைத்துவத்தில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் என்பவை போன்ற தெரிவு செய்யப்பட்ட விடயங்களில் ஆழமான அறிவை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

2015 இல், 1 000 பாடசாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் அதிபர்களுக்கும், பிரதி அதிபர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டமானது இரண்டு 5 நாட்களைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டமாக நடாத்தப்பட்டது.

பின்வரும் அட்டவணையானது, 2015 இல் கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பீடத்தினால் அமுல்நடாத்தப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

| பாடநெறியின் பெயர் | பொறுப்பெடுத்த துறை | இடம் | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பட்டப்பின்படிப்புகள் பாடநெறிகள் (M.Sc கல்வி முகாமைத்துவம்) | தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கல்வி | மீப்பே நிலையம் | 50 |
| பட்டப்பின் டிப்ளோமா பாடநெறிகள் (கல்வி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா) (முழுநேர / பகுதிநேர) | தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 397 |
| டிப்ளோமா பாடநெறிகள் (பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா) | தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் (ஆங்கிலம்) | மீப்பே நிலையம் | 213 |
| குறுகிய கால பாடப் பொருள் சார்பான பாடநெறிகள் (கல்வி முகாமைத்துவத்தில் பாடற்பொருள் சார்பான பாடநெறி) | தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீப்பே நிலையம் | 420 |
| அதிபர் வாண்மைப் பாடநெறி | தொழில்சார் அபிவிருத்தியும் கல்வி முகாமைத்துவமும் | மீப்பே நிலையம் | 1244 |
| வெளிநாட்டு மாணவர்க்கான பாடநெறிகள் (B.Ed முகாமைத்துவ பாடநெறி) | தொழில்சார் அபிவிருத்தியும் கல்வி முகாமைத்துவமும் | மீப்பே நிலையம் | 23 |
| விஞ்ஞான முதுமாணி (கல்வித் தலைமைத்துவ முகாமைத்துவம்) | தொழில்சார் அபிவிருத்தியும் கல்வி முகாமைத்துவமும் | மீப்பே நிலையம் | 33 |

## 6.0 ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது, புதிது காணும் ஆசிரியர்கல்வி முறைகளினைப் பயன்படுத்தி, பாரிய அளவிலும், வெவ்வேறான அளவிலுமுள்ள ஆசிரியர் குழுக்களின் தொழில்சார் அபிவிருத்தித் தேவைகளுக்கு ஆதரவு வழங்கும் ஒரு நீண்ட மற்றும் புகழ்பெற்ற வரலாற்றைக் கொண்டுள்ளது. எந்த ஒரு பாடத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதும் அல்லது இவைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட வேறு அபிவிருத்தி முன்னோடியும் ஆசிரியர் சம்பந்தப்பட்ட காரணியில் தங்கியுள்ளது.

திறன்மிக்க செயற்பாட்டாளர்களாக வருவதற்கு, அவர்களுக்குத் தேவையான விளங்கும் தன்மையும், ஆசிரியர்களுக்கு நம்பிக்கை, தேர்ச்சி என்பன வழங்கும் நோக்கமும் தரும் உயர் தரமான பட்டப்படிப்புப் பாடநெறிகள் வழங்குவதும் தேவையாக உள்ளது. இந்த நோக்கத்திற்காக, தரம்மிக்க ஆசிரியர் கல்வித் துறைகள் மற்றும் சில பாடத்திட்ட அபிவிருத்தி துறைகளும், தராதரப் பத்திர மட்டத்திலிருந்து தத்துவ முதுமாணி மட்டம் வரையான பல்வேறு ஆசிரியர் கல்விப் பாடநெறிகளை ஏற்படுத்தியுள்ளன. இந்த நோக்குக்காக தேசிய கல்வி நிறுவகம் நாடெங்கும் பரந்து கிடக்கும் அதன் பிராந்திய நிலையங்களோடும் நெருங்கிய கூட்டுறவினைக் கொண்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தினால் அமுலாக்கப்பட்ட எல்லாவிதமான பட்டப்பின்படிப்பு, பட்டப் படிப்பு, பட்டமில்லாத கற்கைநெறிகள் யாவும் கல்விசார் ஆளணியைத் தேவையாகக் கருதும் தொழில்சார் அபிவிருத்தியையே பிரதான குறிக்கோளாகக் கொண்டுள்ளன. அத்துடன் அதற்குரிய பொருத்தமான குழுவுக்குப் பின்வரும் ஒத்துழைப்பு நடவடிக்கை களைத் தர எதிர்பார்க்கிறது.

- கல்வியின் புதிய போக்குகளுடன் இணக்கப்படுதல்.
- பரந்தளவிலான பாடஅறிவுடன் வகுப்பறையில் அதை எவ்வாறு பிரயோகிப்பது எனக் கற்றல்.
- உயர்தரத்திலான கற்பித்தலை விருத்தி செய்தலும் வகுப்பறை முகாமைத்துவ திறன்களை விருத்தி செய்தலும்.
- தனித்தனியான வேறுபாடுகளுக்கு இடம்கொடுத்து மாணவர்களுடன் ஆக்கபூர்வமான பணியில் ஈடுபடுதல்.
- பெற்றோர்களுடன் அவர்களின் பலங்கள் மற்றும் இயலுமைகள் பற்றி அறிவுடன் ஆக்க பூர்வமான பணியில் ஈடுபடுதல்.
- சிறந்த கற்பித்தலுக்கான அடிப்படையை வழங்கும் பொதுவான தேர்ச்சிகளின் ஒரு ஒழுங்குமுறையை விருத்தி செய்தல்.
- பணியுடன் சார்பான செயல்முறைகளை விருத்தி செய்ய உதவும் சிறிய அளவிலான ஆய்வுகளில் ஈடுபடுதல்.
- தேர்ச்சி அடிப்படையிலான பெறுபேற்று மதிப்பீடுகளுடனான செயல்முறைகளுடன் இணக்கப்பாடு கொண்டிருத்தல்.
- கற்பித்தலுக்கான தன் நெருக்கடி அணுகுமுறையொன்றை விருத்தி செய்தல்.

புதிய கல்விமாணி (பொறியியல்) நிகழ்ச்சித் திட்டத்தின் பாடத்திட்ட அபிவிருத்தியும் 2013 இல் புகுத்தப்பட்ட தொழில்நுட்பப் பாடங்கள் கற்பிக்கும் 260 ஆசிரியர்களின் நியமனமும், 2015 இல் நிறுவகத்தின் பிரதான பெறுபேறுகளில் ஒன்றாகும்.

பின்வரும் அட்டவணையானது, மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தினதும் மாற்றுக்கல்வி அத்துடன் ஆசிரியர் கல்விப் பீடத்தினதும் பல்வேறு துறையில் அமுலாக்கப்பட்ட பாடநெறிகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக் காட்டுகிறது.

| பாடநெறியின் பெயர் | பொறுப்பெடுத்த திணைக்களம் | அமைவிடம் | பங்குபற்றுனர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| <u>பட்டப்பின்படிப்புப் பாடநெறிகள்</u><br>(தத்துவ முதுமாணி –<br>கல்வி முதுமாணி – கல்வி | ஆசிரியர் கல்வி<br>ஆசிரியர் கல்வி | தேசிய கல்வி நிறுவகம்<br>தே.க.நி (யாழ்ப்பாண நிலையம்) | 10<br>266 |
| <u>பட்டப்பின் டிப்ளோமா பாடநெறிகள்</u><br>(பட்டப்பின் டிப்ளோமா – கல்வி) | ஆசிரியர் கல்வி | தே.க.நி+ 24 பிராந்திய நிலையங்கள் | 4560 |
| <u>பட்டப்படிப்புப் பாடநெறிகள்</u><br>(கல்வியில் இளமாணி)<br>கல்வியில் இளமாணி(பொறியியல்) | ஆசிரியர் கல்வி<br><br>ஆசிரியர் கல்வி | தே.க.நி+ 38 பிராந்திய நிலையங்கள்<br>தே.க.நி | 2100<br><br>263 |
| <u>டிப்ளோமா பாடநெறிகள்</u><br>இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கருதும் கற்பித்தலில் டிப்ளோமா<br>முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வியில் டிப்ளோமா<br>விசேட கல்வியில் டிப்ளோமா<br>சைகை மொழியில் டிப்ளோமா<br>வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறலில் டிப்ளோமா<br>ஜப்பான் மொழியை அந்நிய நாட்டு மொழியாகக் கற்பித்தலில் டிப்ளோமா | ஆங்கிலம்<br>ஆரம்பக்கல்வி<br>உள்ளடக்க கல்வி<br>உள்ளடக்க கல்வி<br>வழிகாட்டல் மற்றும் ஆலோசனை கூறல்<br>பாரம்பரிய மொழிகள் மற்றும் பிறநாட்டு மொழிகள் அலகு | தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி<br>தே.க.நி | 14<br>40<br>51<br>19<br>54<br>12 |
| <u>தராதரப் பத்திர பாடநெறிகள்</u><br>மேலதிக மொழி விருத்திப் பாடநெறி (ALIC) | ஆசிரியர் கல்வி | தே.க.நி+ 38 பிராந்திய நிலையங்கள் | 720 |
| <u>குறுகியகால பாடப்பொருள் சார்பான பாடநெறிகள்</u><br>பிரெயிலில் பாடப்பொருள் சார்பான பாடநெறி | உள்ளடக்க கல்வி | தே.க.நி | 20 |

## 6.1 நிறுவக ரீதியான அபிவிருத்தி

தேசிய கல்வியற் கல்லூரிகள் (NCoES) ஊடாக நடத்தப்பட்ட ஆசிரியர்கல்வி முன்சேவைக் கானதும், அதேபோன்று ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளின் (TTCs) ஊடாக நடத்தப்பட்ட உள்ளக சேவைக்கான ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டத்தினதும் பாடத்திட்ட அபி விருத்திக்கு தேசிய கல்வி நிறுவகம் பொறுப்பானதாகும். சென்ற ஆண்டின்போது பின்வரும் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

- சமூகவியல் பாடங்களுக்கான 03 உசாத்துணை நூல்கள் தயாரிப்பு
- 50 கல்வியியற் கல்லூரிகளினது விரிவுரையாளர்களுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது.
- உள்நாட்டிலுள்ள 11 பிராந்திய நிலையங்களில் 386 தர்மாச்சரிய ஆசிரிய உதவி யாளர்களுக்காக ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடத்தியது.
- பாடசாலைத் தொகுதியில் தரம் 6 மற்றும் 10 இற்கான ஆய்வறிவுக்குப் பொருத்த மான பாடத்திட்டத்தில் 110 ஆசிரிய பயிற்றுனர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது.
- பொதுவான பாடங்களுக்கான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் இறுதி உள்ளகப் பரீட்சைகளுக்கான சிங்களம் மற்றும் தமிழ் மொழியிலான 15 வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன.

## 6.2 பரீட்சைகள்

தேசிய கல்வி நிறுவகத்தால் நடாத்தப்படும் பல்வேறு பாடநெறிகளையும் மதிப்பீடு செய்ய, தேசிய கல்வி நிறுவகத்திற்குரிய வினைத்திறனை ஆற்றல் வாய்ந்ததாக்கும் பரீட்சைத் தொகுதியைக் கொண்டிருப்பது பரீட்சைகள் துறையாகும். 2015 ஆம் ஆண்டிற்குள் துறையினால் நடாத்தப்பட்ட பின்வரும் பரீட்சைகளின் மதிப்பீடு மற்றும் தராதரப்பத்திரம் வழங்கல்களானவை:

தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சை நடைமுறையைப் பலப்படுத்தியது; 2015 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் ஒரு குறிப்பிடத்தக்க பெறுபேறாகும்.

- கொரிய மொழியில் உயர்தர டிப்ளோமா (விசேட மீள்பரீட்சை – அரையாண்டு – 1)
- கொரிய மொழியில் உயர்தர டிப்ளோமா (விசேட மீள்பரீட்சை – அரையாண்டு – 111)
- கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா 2013/2014 (இறுதி)
- சைகை மொழி டிப்ளோமா – 2014 (இறுதி)
- கல்வியியல் இளமாணி (2013/2015) – பகுதி – 1
- கல்வியியல் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் (MSc)
- கல்வியியல் நிர்வாகத்தில் பட்டப்பின் டிப்ளோமா
- 6 - 11 தரங்களுக்கான விஞ்ஞானக் கற்பித்தல் உயர்தர தராதரப் பத்திர பாடநெறி
- கல்வியியல் முதுமாணி 2013/2015 (இறுதி)
- முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி டிப்ளோமா 2014 – 2015 (இறுதி)
- கொரிய மொழியில் தேசிய டிப்ளோமா - தவணை – 1
- இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் டிப்ளோமா 2014/2015 (இறுதி)
- கல்வியியல் இளமாணி – பகுதி – 1 – விசேட பரீட்சை
- மேலதிக மொழி விருத்திப் பாடநெறி 2015 (எழுத்து, கேட்டல்) – மட்டம் 1

- மேலதிக மொழி விருத்திப் பாடநெறி 2015 (வாய்மூலமானது)
- கொரிய மொழியில் உயர்தர டிப்ளோமா (தவணை 111)
- கொரிய மொழியில் தேசிய டிப்ளோமா
- கல்வியியல் இளமாணி 2011/2013 – (பகுதி 111)
- பிரெயில் கல்வியில் குறுகிய கால தராதரப் பத்திர பாடநெறி

## 7.0 மாற்றுக் கல்வி

### 7.1 உள்ளகக் கல்வி

உள்ளக கல்வித் துறை, அனைவருக்குமான கல்வி என்னும் கருத்துருவை உண்மை யாக்கும் ஒரு விசேட தானத்தைக் கொண்டுள்ளது. இத்துறையானது விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்குப் பொருத்தமான பாடசாலைப் பாடநெறியை அபிவிருத்தி செய்யும் பொறுப்பைக் கொண்டுள்ளது. விசேட கல்வி மற்றும் உசாத்துணைப் பாடத்திட்ட ஆவணங் களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர் களுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குகிறது. மேலும், அவைகள் உள்ளகக்கல்வி, சைகை மொழி மற்றும் பிரெயில் கல்வி ஆகிய பாடநெறிகள் ஊடாக தொழில்சார் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தைக் கொண்டிருக்கின்றன. கீழ்க் குறிப்பிடப்படும் செயற்பாடு கள் குறித்த காலத்திற்குள் நடந்தேறின.

- பிறெயில் கல்விப் பயிற்சிப் பொதியை இற்றைப்படுத்தி, மென்திறன் அபிவிருத்திக்கான 04 செயலமர்வுகளை நடத்தியமை.
- விசேட கல்வியில் பிள்ளைகளின் கற்றல் - கற்பித்தல் திறன்களில் 80 ஆசிரியர்களுக் கும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் பயிற்சிகள் வழங்கியமை.
- புவியியல் பாடத்திற்கான சைகை மொழிக் கலைச்சொல் தொகுதியைத் தயாரித்தமை.
- விசேட கல்வியில் சஞ்சிகையைப் பிரசுரித்தமை.
- சமூக சேவை அமைச்சில் சைகை மொழிப் பாடநெறியை நடாத்த வழிகாட்டுதல் வழங்கியமை.
- விசேட கல்வியில் விழிப்புலனற்ற பிள்ளைகளோடு ஒப்பிட்டு கேட்டல் குறைபாடான பிள்ளைகளின் மட்ட அடைவு பற்றித் தீர்மானிக்கும் ஆய்வு ஒன்றை நடாத்தியமை.

### 7.2 இலத்திரனியல் பரவல்

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை சமூகத்தை மட்டுமன்றி, வெளியிலுள்ள சமூகத்தையும் இலத்திரனியல் கற்றல் உபரணங்களாகிய தொலைக்காட்சி, வானொலி மற்றும் கவர்ச்சியான, வினைத்திறன்மிக்க கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன் படுத்துவதுடன், இத்தகைய உபகரணங்கள் பாரம்பரியம் அல்லாத கல்விப் புலங்களில் பயன்படுத்தப்படுகின்றன. அழகியற் கல்விப் பாடங்களான பாடல்கள், சங்கீதம் மற்றும் நாடகம் என்பவற்றின் ஊடாக பாடத்திட்டத்தின் உயர்தர நிலையிலுள்ள கருத்துருக்களை விளக்கவும், காலத்திற்குக்காலம் மாற்றமடைகின்ற, பாடத்திட்ட விடயங்களின் மீது

பாடசாலைச் சமூகம் விழிப்புணர்வு கொண்டிருக்க வேண்டும் என்ற வகையில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

2015 இன் முடிவில் பின்வரும் செயற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன.

- க.பொ.த. உயர்தரத்தின் புதிய தொழில்நுட்பப் பிரிவின் கற்றல் செயற்பாடுகளுக்கு அனுசரணை செய்யும் வகையில் பாடசாலைகளுக்காக 80 ETV நிகழ்ச்சித் திட்டங் களை உருவாக்க ஆரம்பித்துள்ளது.
- கற்பித்தல் - கற்றல் செயன்முறையை வளமூட்டுவதற்காக 12 கல்வியியல் இறுவட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாகியுள்ளன.
- 2015 இல் ஆய்வு முறைப் பாடத்திட்டங்கள் மீது கல்வி மறுசீரமைப்பு புகுத்தப் படுவதை மேம்படுத்த 90 இறுவட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

## 7.3 வழிகாட்டுதலும், ஆலோசனை வழங்கலும்

கல்விசார் சமூகத்தின் உளவியல் தேவைகளை எதிர்கொள்ள 2006 ஜுன் மாதம் வழிகாட் டல் மற்றும் ஆலோசனை வழங்கும் அலகு அமைக்கப்பட்டது. இவ்வலகானது மாணவர் சமூகத்தின் வாழ்க்கையை வழிகாட்டவும், ஆலோசனைகள் வழங்கும் சேவைகளுக்குமான பொறுப்புக்களை மேற்கொண்டுள்ளது.

2015 இல் பின்வரும் செயற்பாடுகள் நிறைவுக்கு வந்துள்ளன.

- 64 பாடசாலை மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் உள்ளக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- 225 ஆசிரியர்களுக்கு, ஆலோசனை வழங்குதல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.
- பாடசாலை ஆலோசனைப் பாடநெறியின் டிப்ளோமாவிலுள்ள வாழ்க்கைத் தொழில் வழிகாட்டும் கூறுக்காக புதிய பாடத்திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

## 7.4 திறந்த கற்றல்

திறந்த பாடசாலை அலகானது, பல்வேறு காரணங்களுக்காக பாரம்பரிய கல்வியைத் தவறவிட்ட குழுக்களுக்கான தொலைக்கல்விப் பாடநெறிகளை நடாத்தும் நோக்கில் அமைக்கப்பட்டது. இச்செய்முறை, தொலைதூர மற்றும் திறந்த முறைகள் என்பவற்றை உபயோகித்து, கற்பவர்களுக்கு அணித்தாக கல்வியை எடுத்துச் செல்கிறது. கல்விசார் தகுதிகள், தொழில் அல்லது சிவில் நிலைமை என்பவற்றைக் கருதாது அனைவர்க்கும் கல்வி வாய்ப்புக்களை அளிக்கும் பரந்த நோக்கத்தை எதிர்பார்த்தே இந்த அலகு செயற்படுகிறது. திறந்த பாடசாலையானது கற்பவர், தான் எப்போது படிக்கத் தொடங்க வேண்டும், எந்த வழியில் கற்றலைப் பெறவேண்டும், அத்துடன் எந்தப் பொருத்தமான கட்டத்திலிருந்து தொடங்கவேண்டும் என்ற விடயங்களுக்கெல்லாம் அனுசரணையாகச் செயற்படுகிறது.

தேசிய கல்வி நிறுவகத்தின் திறந்த பாடசாலை அலகின் நீண்டகால குறிப்பிடத்தக்க மற்றும் அடையாளப்படுத்தக்கூடிய அர்ப்பணிப்பைக் கருத்திற் கொண்டும், நாட்டில் பாடசாலையி

லிருந்து இடைவிலகிச் சென்ற மாணவர்களுக்குக் கல்வியூட்டும் செயற்பாட்டிற்காகவும் UNESCO KING SEJONG LITERACY விருது - 2015 ஆனது தேசிய கல்வி நிறுவகத்தின் திறந்த பாடசாலை அலகிற்கு வழங்கப்பட்டது ஒரு சிறந்த மைல் கல்லாகும்.

திறந்த கற்றலுக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் 2015 இல் பின்வரும் செயற்பாடுகள் நிறைவு பெற்றுள்ளன.

- 02 திறந்த பாடசாலை பாடநெறிகள் (ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை) நடாத்தப் பட்டன.
- சம்பந்தப்பட்ட பாடநெறிகளுக்காக 02 உசாத்துணை கற்றல் சாதனங்கள் தயாரிக்கப் பட்டன.
- கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையின் பொருட்டு 7 கண்காணிப்பு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- திறந்த பாடசாலை கற்கை நாடிகளுக்காக 36 நேருக்கு நேரான அமர்வுகள் நடாத்தப் பட்டன.
- திறந்த பாடசாலை செயற்றிட்டத்திற்காக ஒரு இறுவட்டு தொகுப்பு விசேட நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டது.

## 8.0 ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்கிச் செயற்படும் நிறுவகம் என்ற வகையில் தேசிய கல்வி நிறுவகம், பாடத்திட்ட அபிவிருத்தி, தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கொள்கையாக்கம் என்பவற்றை வெவ்வேறு வகையான ஆய்வு மற்றும் திட்டமிடல் நடவடிக்கைகள் மூலம் அமுலாக்கி வருகிறது. இந்த நடவடிக்கைகள், ஆய்வு மற்றும் அபிவிருத்தி, திட்டமிடல், மதிப்பீடு அத்துடன் வெளியக மூலவள முகாமைத்துவ அலகு என்பவற்றின் மூலம் நடத்தப் படுகின்றன.

### 8.1 ஆய்வும் அபிவிருத்தியும்

ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறையின் பிரதான பணிகளாக முன்னெடுத்தல், அபிவிருத்தியுடன் கல்விசார் ஆய்வை நீடித்தல், கல்விசார் பிரச்சினைகளை – தேவையா யின் கலந்துரையாடவும், விவாதிக்கவும், கல்விப்புலத்தில் இருக்கும் மக்களுக்கு வாய்ப்புக் கள் வழங்குதல், அதன் மூலம் அவர்களின் ஆய்வுத்திறன்களை, பாடநெறிகள் நடாத்து வதன் மூலமும், உதவுத் தொகை வழங்குதல் மூலமும், ஆய்வுத் தகவல்களைப் பிரசுரிப்பதன் மூலமும் தனது பணிகளை முன்னெடுக்கிறது.

2015 ஆம் ஆண்டில் இந்தத் துறையானது தலைசிறந்த பெறுபேற்று அடைவாக பின்வரு வனவற்றைக் கூறலாம்.

- கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் தொழில்சார் பாடநெறிகளுக்காக செயல் ஆய்வு பாட நெறி வழிகாட்டி தயாரிக்கப்பட்டது.
- 2014 இல் அமுலாக்கப்பட்ட தரம் 6 மற்றும் 10 இற்கான பாடத்திட்டத்தின் மறுசீரமைப் பும், 2015 இல் புகுத்தப்பட்ட பாடத்திட்டமும் சம்பந்தப்பட்ட உள்வாரி சேவை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் ஆய்வு ஒன்றின் இறுதி அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டது.
- க.பொ.த (சா/த) வகுப்பறையில் பாடசாலை மட்ட மதிப்பீட்டின் அமுலாக்கம் பற்றிய ஒரு ஆய்வின் இறுதி அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டது.
- 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அபிப்பிராய ஆய்வு ஒன்றுக்கான இடைக்கால அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டது.
- “கலாநிதி கன்னங்கரவின் இலங்கையின் அறிவுப் பொருள் நிலையின் மறுசீரமைப்பும் வெளிப்பாடும்” என்னும் கல்வி மறுசீரமைப்பு பற்றிய C. W. W. கன்னங்கரவின் 26 ஆவது ஆண்டு ஞாபகார்த்த விரிவுரை கொழும்புப் பல்கலைக்கழக, கல்விப்பீடத்தின் முன்னாள் பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

### 8.2 திட்டமிடலும் மதிப்பிடலும்

தேசிய குறிக்கோள்களுடன் ஒத்துப் போகக்கூடியவாறாக தேசிய கல்வி நிறுவகத்தின் குறிக் கோள்களும் பெறுபேற்றை அடைவதற்கு, கிடைத்திருக்கின்ற மனித மற்றும் பௌதிக வளங் களை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்தி, பின்வரும் செயற்பாடுகள் 2015 இன் இறுதியில் திட்டமிடலும் மதிப்பிடலும் துறையின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 2014 இற்கான வருடாந்த முன்னேற்ற அறிக்கை மற்றும் நடைமுறையிலுள்ள 2015 இற்கான செயற்பாட்டு அறிக்கை என்பன தயாரிக்கப்பட்டன.
- மத்திய வங்கி, கல்வியமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் கோரப்படும் முன்னேற்ற அறிக்கைகளும் தயார் செய்யப்பட்டன.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவிக்கான செயற் திட்டங்களின் கீழ் செயற் பாடுகளின் காலாண்டுக்கான முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## 9.0 நிர்வாகம், நிதி சம்பந்தமான மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள்

நிர்வாகம், நிதி மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள் பிரிவின் செயற்பாடானது, நிறுவகத்தின் ஐந்து கல்விசார் பீடங்களின் செயற்பாடுகளுக்கு இணைந்ததாக நிதி, பௌதிக வளம் மற்றும் முகாமைத்துவ சேவைகளை ஆற்றுகிறது.

### 9.1 நிர்வாகத் துறை

நிர்வாகப்பிரிவு, நிதி மற்றும் ஒத்துழைப்புச் சேவைகள் என்பவற்றின் கீழ்வரும் நிர்வாகத் துறை, நாளாந்த நிர்வாகத்திற்குச் சார்பான அனைத்து நிகழ்வுகளுக்குமான பொறுப்பு

களைக் கையாளுகிறது. உத்தியோகத்தரின் பயிற்சித் தேவைகளை அடையாளங் கண்டு, உள்ளூர் மட்டத்தில் தேவையான பயிற்சிகளை வழங்குகிறது.

நாளாந்த நிர்வாகரீதியான செயற்பாடுகளுக்கு அப்பாலாக, 2014 ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலப்பகுதியில் கீழ்க் காணப்படும் நியமனங்களை நிர்வாகத் துறை செய் துள்ளது.

பின்வரும் நியமனங்களை 2014 ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப்பகுதியில் நிர்வாகத் துறை செய்துள்ளது.

**<u>நியமனங்கள்</u>**

சிரேஷ்ட விரிவுரையாளர் - 05
உதவிக் கல்வியாளர் - 04

**<u>பதவியுயர்வு</u>**

சிரேஷ்ட விரிவுரையாளர் - 12
விரிவுரையாளர் - 08

36 கல்விசார் ஊழியர்க்கும், கல்விசாரா ஊழியர்களுக்கும் நிதி உதவி மற்றும் கற்கை விடுமுறை என்பன வழங்கப்பட்டுள்ளன.

- நடைமுறையிலுள்ள ஆளணியின் நியமனம் மற்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் சம்பள முரண்பாடுகள் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவும் மதிப்பீடு செய்யவும் குழு வொன்று அமைக்கப்பட்டது.

## 9.2 நிதித் துறை

நிதி சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடித்து நிறுவகத்தின் வருமானம் மற்றும் செலவுக்கான அறிக்கைகளைத் தயாரித்து வைத்திருத்தலும், நிறுவகத் தின் அனைத்துப் பணிகளுக்குமான நிதிமூலவளங்களை வழங்குதலுமே நிதித் துறையின் பணியாகும்.

- நிலையான மூலதன பதிவு மற்றும் மதிப்பீட்டு நடைமுறைகளின் பதிவு என்பவற்றை தயாரிக்கும் பணி பூர்த்தியாக்கப்பட்டது.
- 2015 இற்கான ஆய்வுச்சபையின் அறிக்கை பூர்த்தியாக்கப்பட்டது.
- 2015 இற்கான நிதி சம்பந்தமான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## 9.3 பொறியியல் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை

பொறியியல் சேவைகள் துறையானது, நிறுவகத்தின் கட்டடங்களின் நிர்மாணம் மற்றும் பராமரிப்பு என்பவற்றைக் கையாண்டு, கல்வி நடவடிக்கைக்காகப் பௌதிக சூழலைப் பொருத்தமான வகையில் பராமரிப்பதற்கான பொறுப்பை நிறைவேற்றுகிறது. அத்துடன் மின்சாரக் கட்டமைப்பின் பராமரிப்பு, தொலைபேசிச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளை

வழங்குதல், சுற்றாடலின் சுத்தம், பாதுகாப்புச் சேவை என்பவற்றையும் வழங்குகிறது. 2015 இன் இறுதியில் பொறியியல் சேவைகளின் சார்பில் பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற் றப்பட்டுள்ளன.

- புதிய கேட்போர் கூடத்தின் புதுப்பித்தல் வேலையும், தேசிய கல்வி நிறுவகத்தின் நீர் சுத்திகரிப்புச் சாதனத்தின் அமைப்பும் நிறைவேற்றப்பட்டன.
- தேசிய கல்வி நிறுவகத்திலும் மீப்பே வளாகத்திலும் 31 திருத்தவேலைகளும் பராமரிப்பு வேலைகளும் முடித்துக் கொடுக்கப்பட்டன.

## 9.4 வாசிகசாலை

தேசிய கல்வி நிறுவகத்தின் உள்வாரி அலுவலர்கள் மட்டுமன்றி, வாசிகசாலையானது பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், கல்வியியற் கல்லூரி உத்தியோகத்தர்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அத்தோடு ஏனைய கல்வியாளர் களும் கல்வித்தேவைகளுக்காக அடிக்கடி வாசிகசாலையை நாடிவருகின்றனர். 2015 இல் வாசிகசாலைச் சேகரிப்பாக பின்வரும் நூல்களும் CD களும் சேர்க்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| நூல்கள் | - | 829 |
| நூல்கள் (அன்பளிப்பாக) | - | 87 |
| பாடத்திட்ட ஆவணங்கள் | - | 02 |
| கல்வி சம்பந்தப்பட்ட அறிக்கைகள் | - | 54 |
| உள்ளூர் சஞ்சிகைகள் (அன்பளிப்பாக) | - | 02 |
| உள்ளூர் சஞ்சிகைகள் | - | 05 |
| வெளிநாட்டு சஞ்சிகைகள் (அன்பளிப்பு) | - | 05 |

## 9.5 அச்சிடுதல் மற்றும் வெளியீடுகள்

2015 இல் அச்சிடுதல் மற்றும் பிரசுரங்கள் துறை நிறுவகத்தின் பின்வரும் வெளியீடுகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

- ஆசிரியர் அறிவுரைப்புக் கையேடு - 14
- உசாத்துணை நூல்கள் - 204
- ஏனைய ஆவணங்கள் - 51
- சான்றிதழ்கள் - 13
- மொடியூல்கள் (உசாத்துணை) - 06
- பாடத்திட்டங்கள் - 31

அத்துடன் 04 புத்தகக் கண்காட்சிகளில் பங்குபற்றி தேசிய கல்வி நிறுவகத்தின் வெளியீடு களையும் பாடத்திட்ட அபிவிருத்திக்கான ஆவணங்களையும் காட்சிப்படுத்தும் வாய்ப்பினை யும் ஏற்படுத்தியிருந்தது.

මගේ අංකය / எனது இல. / My No. ஈடியு/சீ/என்ஐஈ/1/15    මගේ අංකය / உமது இல. / Your No.    දිනය / திகதி / Date 2016 செப்தெம்பர் 05

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய கல்வி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் ,பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுமற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம்,ஒரு விபரமான அறிக்கை 2016 யூலை 26 ஆந் திகதிநிறுவகத்தின்பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34    +94-11-2887223    oaggov@sltnet.lk    www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கல்வி நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது காசு மற்றும் காசுக்கு சமனானவற்றை கணிப்பிடும் போது கையிருப்பிலுள்ள காசு மற்றும் குறுங்கால திறைசேரி உண்டியல்களுடன் கூடிய முதலீடுகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமெனினும் காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது ரூபா 321,948,287 தொகையான குறுங்கால வைப்புக்கள் காசு மற்றும் காசுக்கு சமனானவையாகக் கருதி கணிப்பிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் ஆண்டுக்கான இலாபத்துடன் சீராக்கம் செய்யப்பட வேண்டுமெனினும். நிறுவகத்தினால் முன்னைய ஆண்டுகளில் நிலையான சொத்துக் கைத்தவிர்ப்பு மூலம் ஏற்பட்ட இலாப நட்டம் கைத்தவிர்ப்பு இலாப நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அதன் மீதி ரூபா 3,640,844 ஆக இருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

நிறுவகத்திற்கு உரித்தற்ற ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்திட்டத்திற்குரிய ரூபா 4,000,000 பெறுமதியான 02 வாகனங்கள் நிறுவகத்தின் சொத்துக்களாக 2014 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 213,909 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவிலலை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2016 சனவரி 14 ஆந் திகதி இறுவெட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக தெரிவுப் பரிசோதனையின் போது இருப்புப் களஞ்சியத்தினுள் 44 விடயங்களுக்குரிய ரூபா 1,252,600 பெறுமதியான 6,263 இறுவெட்டுக்கள் அளவொன்று காணப்பட்டதுடன், அந்த மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்புப் பதிவேடுகளின் மீதிகளுடன் இணங்கச் செய்யும் போது ரூபா 412,000 பெறுமதியான 2060 இறுவெட்டுக்களின் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு வினாப்பத்திரத்தை அச்சிடுவதற்காக கல்வி அமைச்சிலிருந்து பெறவேண்டிய ரூபா 3,237,800 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பெறவேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 3,306,017 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய செலவினங்களுள் 2 முதல் 5 வருடங்களுக்கிடைப்பட்ட ரூபா 1,397,421 தொகை மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 391,613 தொகை ஆகியவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும்இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2015 மார்ச் 10 ஆந் திகதிய 03/2014(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | தொடர்பாடல் வசதிகள் பெறும் உத்தியோகத்தர்களுக்குரிய ஆகக்கூடிய தொலைபேசி எல்லைகளுக்குரிய பொது நிதிச் சுற்றறிக்கையை தவறாக அர்த்தம் கொண்டு, நிறுவகத்தினால் 2015 யூலை 02 ஆந் திகதிய 452(1) ஆம் இலக்க உள்ளகக் கட்டுப்பாடு சுற்றறிக்கையொன்றை வெளியிட்டு உரிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 91,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ12/ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 மற்றும் 9.8 ஆம் பந்தி | கொழும்பு கற்றல் நிலையத்தின் முதுமாணி கற்கை நெறியை தொடரும் 6 உத்தியோகத்தர்களுக்காக 2014 நவம்பர் முதல் 2015 திசெம்பர் வரை ஒருவருக்கு மாதாந்த கொடுப்பனவாக ஐக்கிய அமெரிக்க டொலர் 150 படி ரூபா 1,663,200 கூட்டுத்தொகை திறைசேரி செயலாளரின் அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) 2006 அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) பிரிவு | ரூபா 500,000 பெறுமதியை விஞ்சும் கொள்வனவுகளுக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டுமெனினும் அவ்வாறு மேற்கொள்ளப்படாத 12 சந்தர்ப்பங்களில் ரூபா 29,788,288 கூட்டுப் பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |

| | |
|---|---|
| (ஈ) 2010 செம்தம்பர் 06 ஆந் திகதிய கொள்வனவு கையேட்டுக்கான 9.3.1 (ஆ) மேலதிக பந்தி | மோட்டார் வாகனம் மற்றும் உபகரணங்களின் பழுதுபார்த்தலின் போது ரூபா 200,000 இனை விடக்கூடிய செலவினங்களுக்காக உரிய வரிசை அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டினுள் 3 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 870,106 கூட்டுத்தொகையான பழுதுபார்த்தல் செலவினம் தொடர்பில் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம்,2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவு ரூபா 157,631,150 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான நிதி விளைவு ரூபா 59,870,748 மிகையொன்றானமையால்முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 97,760,402 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செலவினம் ரூபா 51,914,694 இனால் அதிகரித்திருந்ததெனினும் வருமானம் ரூபா 149,675,095 இனால் அதிகரித்தமையால் மேற்படி நிதி விளைவில் அதிகரிப்பிற்கு காரணமாக அமைந்திருந்தது.

### 3.2 பங்களிப்பு

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2012 ஆம் ஆண்டின் நிதி மிகை 64 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததெனினும் பங்களிப்பிலான குறைவு 7 சதவீதம் மாத்திரமாகும். 2012 ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதி விளைவு அதிகரித்திருந்ததுடன், ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு சீராக்கங்களின் பின்னரான நிறுவனத்தின் ஒட்டு மொத்த பங்களிப்பு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை முறையே ரூபா 318,104,459 இனால், ரூபா 336,995,276 இனால் மற்றும் ரூபா 500,421,340

இனால் அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டளவில் பங்களிப்பு 57 சதவீதத்தால் உயர்வடைந்திருந்தது.

## 3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் நிறுவகத்தின் நடைமுறை விகிதம் 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 5.4:1 மற்றும் 3.3:1 ஆகும். அவ்வாறே விரைவு விகதம் 5.2:1 மற்றும் 2.8:1 ஆகும். நடைமுறைச் சொத்துக்களினுள் 86 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவது திறைசேரி முறிகளும் வங்கி நடைமுறை கணக்கு மீதிகளுமாவதுடன், நிறுவகத்தின் பெருந்தொகையான சொத்துக்கள் திரவத்தன்மையுடைய சொத்துக்களினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நிறுவகத்திற்குச் சொந்தமான 6 வங்கிக் கணக்குகளில் 2 வங்கிக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 96 மில்லியன் மற்றும் ரூபா 88 மில்லியனுமாக இருந்ததுடன், தேவைப்பாட்டினை விஞ்சி காசு மீதிகளை பேணியிருந்தமையும் குறுங்கால முதலீடுகளை மேற்கொண்டமையின் காரணத்தாலும் நடைமுறை மற்றும் விரைவுச் சொத்து விகிதங்கள் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

## 3.4 நிறுவகத்திற்கு எதிராக அல்லது நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற 06 உத்தியோகத்தர்களால் உடன்படிக்கை மீறப்பட்ட காரணத்தால் ரூபா 11,651,636 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நிறுவகத்தால் நீதிமன்றங்களில் 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் தவணையொன்றிற்கு ரூபா 14,604 படி ரூபா 876,236 பெறுமதியான 60 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நான்கு உத்தியோகத்தர்கள் நிதி மோசடியொன்றின் காரணமாக சேவையிலிருந்து பதவியிறக்கல் மற்றும் ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. அவற்றுள் இரண்டு வழக்குகளுக்குரிய உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 1,336,075 தொகையான நிலுவைச் சம்பளங்களை செலுத்தி அவர்கள் மீண்டும் சேவையிலமர்த்தப்பட்டிருந்தனர்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையின் கல்வி அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல், பல்வேறு கல்விசார் பாடங்களின் பட்டப்பின் படிப்பு, கல்விக் கட்டமைப்பின் செயலாற்றல் மற்றும் கல்விசார் முறைமைகள் தொடர்பில் கற்கைகள் மேற்கொள்ளல், கல்வி கட்டமைப்பினை நவீனமயப்படுத்தும் நடைமுறையினை ஆரம்பித்தல் மற்றும் கல்விசார் பதவியணியின் தொழிற் திறமைகளை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களை முன்கொண்டே தேசிய கல்வி நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் செயன்முன்னேற்றத்தையும் பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முதலாம் தரத்திற்கான ஆசிரியர் வழிகாட்டிக் கோவை தொடர்பில் மாகாண வளப் பங்களிப்பு குழுவினால் 600 வளப் பங்களிப்பாளர்களை பயிற்றுவிக்க இலக்கிடப்பட்டிருந்ததெனினும், 08 நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 477 வளப் பங்களிப்பாளர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி ஏற்பாடுகள் தொடர்பில் கற்கைகள் மேற்கொள்ளல் (7 வருடங்கள்), தரவு அறிக்கைகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றின் பெறுபேறுகளை அறிவித்தல் இடம்பெற வேண்டுமெனினும் தரவுப் பகுப்பாய்வு மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

(இ) இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தினை கற்பிக்கும் டிப்ளோமா 2014/2015 குழுவின் 05 தலைப்புக்களின் கீழ் ஆராய்ச்சி முன்மொழிவுகளை அங்கீகரித்தல் இடம்பெற்றிராததுடன், 2015/2016 குழுவின் 16 செயற்திட்டங்கள் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டுமெனினும் அது இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) 03 கற்கை ஆராய்ச்சி குறிப்புக்கள் வெளியிடப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்கு சொந்தமான வாகனம் மற்றும் யுனிசெப் நிறுவனத்தினால் நிறுவகத்திற்கு வெகுமதியளிக்கப்பட்ட வாகனம் ஆகியவற்றை நிறுவகத்திற்கு கையேற்பதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மலேசியாவின் விஞ்ஞான மற்றும் முகாமைத்துவ பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பினை தொடர்வதற்காக சம்பளத்துடன் கூடிய 02 வருடங்களும் சம்பளமற்ற வருடமொன்று உள்ளடங்கலாக 03 வருட காலப்பகுதிக்காக 04 உத்தியோகத்தர்களும், கொழும்பு கற்றல் நிலையத்தில் கல்வியினைத் தொடர்வதற்காக 06 உத்தியோகத்தர்களும் உள்ளடங்கலாக 10 உத்தியோகத்தர்களுக்காக பாடநெறிக் கட்டணமாக ரூபா 24,593,922 செலுத்தப்பட்டிருந்தது.கொழும்பு கற்றல் நிலையத்தில் , கல்வி கற்கும் உத்தியோகத்தர்கள் நிறுவகத்திற்கு சில தினங்கள் சேவைக்கு அறிக்கையிட்டிருந்ததுடன், கொழும்பு கற்றல் நிலையத்தின் வருகைப் பதிவேட்டின் பிரகாரம் அவர்கள் 2015 சனவரி முதல் மார்ச் மாதம் வரை பாடநெறிக்கு சமூகமளித்திருக்கவில்லை. எனினும் இந்த 10 உத்தியோகத்தர்கள் உரிய கல்வி நடவடிக்கைகளுக்கு பங்குபற்றி அல்லது உரிய முறையில் கடமைக்கு அறிக்கையிடாமல் 2014 நவம்பர் முதல் 2015 மார்ச் வரை ரூபா 2,818,890 சம்பளம் பெற்றுக்கொண்டிருந்தனர்.

(இ) கல்வி அமைச்சு, ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பு (யுனெஸ்கோ) மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையே 2012 செப்தெம்பர் மாதம்ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியன செயற்பட வேண்டிய நிறுவனங்களாவதுடன், உடன்படிக்கையின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் யுனெஸ்கோ அமைப்பினால் ஒவ்வொரு துறைக்கும் சிறப்பான அறிவு உள்ளடங்கலாக தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு இணங்கியிருந்த போதிலும் 15 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை காலம் 06 வருடங்களாவதுடன் தற்போது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த தெற்காசிய ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராததுடன் யுனெஸ்கோ தொழில்நுட்ப உதவியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2001 ஆகஸ்ட 13 ஆந் திகதிய 2/காணி/அப01/1416/97 ஆம் இலக்க கல்வி அமைச்சுச் செயலாளரின் கடிதத்தின் மூலம் கையளிக்கப்பட்ட ரூபா 78,600,000 பெறுமதியான 7.0958 ஹெக்டேயர்கள் பரப்பளவுள்ள காணி மற்றும் ரூபா 65,000,000 பெறுமதியான பதுவத்த காணிகளின் உரித்து முறையாக கையேற்கப்படாமல் நிறுவகத்திற்கு சொந்தமான சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்தன.

(ஈ) 2008 ஆம் ஆண்டின் போது நிறுகவத்தின் மூன்று மாடி விடுதியின் மலசலகூட கட்டமைப்பினை நிர்மாணிப்பதற்காக ரூபா 27,848,100 தொகையான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக 2008 மார்ச் 14 ஆந் திகதி மதியுரைச் சங்கமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு, மதியுரைக் கட்டணமாக ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதம் அல்லது ரூபா 1,200,949 செலுத்தி 8 வருடங்கள் கடந்துள்ள போதிலும் நிர்மாணப் பணிகள் 2016 யூன் 30 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாணவர் தகவல் கட்டமைப்பொன்றினை தயாரிக்கும் பிரதான பணிகளை ஒழுங்கமைப்பதற்காக அரச நிறுவனமொன்றல்லாத தனிநபரொருவருடன் கொள்வனவு நடைமுறைக்கு புறம்பாக 2013 யூன் 25 ஆந் திகதியிலிருந்து 2 வருடங்கள் கொண்ட காலப்பகுதியினுள் அபிவிருத்தி நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு, 2013 யூலை மாதம் ரூபா 140,000 செலுத்தப்பட்டிருந்ததெனினும்,இந்த தகவல் கட்டமைப்பு உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 8,750,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எதுவித ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் இந்த நிதியமானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆசிரியர் விடுதி வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமையின் காரணத்தால் ரூபா 85,794,089 செலவில் நிர்மாணம் பூர்த்தி செய்யப்பட்டு வருடமொன்று பூர்த்தியடைவதற்கு அண்மிய ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன்,ரூபா 4,814,318 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் பாவனைக்கு எடுக்கப்படாமல் உத்தரவாத காலமும் முடிவடைந்திருந்தது.

(ஆ) உரிய திட்டமொன்றின் பிரகாரம் அச்சிடல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையின் காரணத்தால் 90 விடயங்களுக்குரியரூபா 5,069,146 பெறுமதியுடைய 48,160 புத்தகங்கள் நீண்ட காலமாக விற்பனை செய்யப்படாது கணக்காய்வு திகதியான 2016 யூன் 30 வரை களஞ்சியத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

4.6 ஒப்பந்த நடைமுறை

ரூபா 93,975,432 நிர்மாணக் கிரயமுடைய தெற்காசிய ஆசிரியர் பயிற்சி நிலையக் கட்டிடம் 2015 மார்ச் 17 ஆந் திகதி நிறுவகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததெனினும், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பல்வேறு இடங்களில் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தமை, சன்னல்கள், கதவுகள் மற்றும் சலலைக் கற்கள் கழன்றிருந்தமை, கொங்கிறீட் தூண்கள் வெடிப்புற்றிருந்தமை, கட்டிடத்தினுள் நீர் கசிவு ஏற்படுகின்றமை போன்ற பல பாரதூரமான குறைபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், இதன் போது நிர்மாணங்களின் உறுதித்தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது திருப்தி கொள்ள முடியாதிருந்தது.

4.7 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 22 ஆந் திகதிய DMS/B1/37/3/Vol 111 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களக் கடிதத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 652 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினர் 455 ஆனமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறாக 197

உத்தியோகத்தர்களுக்கு வெற்றிடங்கள் நிலவியது. அந்த பற்றாக்குறையில் நிறுவகத்தின் உயர் முகாமைத்துவத்திற்குரிய பதவிகளின் எண்ணிக்கை 119 ஆக இருந்ததுடன், அவற்றுள் 100 விரிவுரையாளர்களாகவும் 13 பதவிகள் வேலை மேவுகையாகவும் இருந்ததன் காரணத்தால் நாட்டின் பிள்ளைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதற்கான செயற்பொறுப்பில் விடய சேவைகளின் அபிவிருத்தி உள்ளடங்கலாக நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பினை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கான இயலுமை பிரச்சினைக்குரியதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறுவகத்தினால் 95 வெற்றிடங்களை நிரப்புவதற்காக 3 சந்தர்ப்பங்களில் ரூபா 267,731 செலவினமொன்றை மேற்கொண்டு பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்ததெனினும், அந்த வெற்றிடங்களில் ஒன்றேனும் மீளாய்வாண்டில் நிரப்புவதற்கு நிறுவகம் தவறியிருந்தது.

(இ) நிறுவகத்தின் நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் பிரதி பணிப்பாளர் நாயகம் பதவிகள் 5 இனை கொண்டுள்ளதுடன், அவற்றுள் 3 பதவிகளுக்கு வெற்றிடங்கள் நிலவியது. மீளாய்வாண்டின் போதும் அந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் இரண்டாம் நிலை மற்றும் இணைப்பு அடிப்படையில் தற்காலிக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஈ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிறுவனத்தின் 5 பதிற்கடமை பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு ரூபா 154,120 தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், எட்டு திணைக்களங்களின் 8 தலைவர்களுக்காக பதிற்கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) இரண்டு உதவி விரிவுரையாளர் பதவிகளுக்காக 2011 யூன் 01 ஆந் திகதி மற்றும் 2013 திசெம்பர் 01 ஆந் திகதி அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படைகளில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 3,181,505 தொகையான சம்பளங்கள் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு புறம்பாக பணிப்பாளர் (அச்சிடல்) பதவியொன்றில் பதிற் கடமைக்காக மாதாந்தம் ரூபா 9,632 தொகையான பதிற்கடமை சம்பளம் செலுத்தும் அடிப்படையில் 2015 ஒக்தோபர் 29 ஆந் திகதி முதல் உத்தியோகத்தரொருவர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளவாறான செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 24 சதவீதம் முதல் 1647 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2009 யூன் 01 ஆம் திகதிய 30 (I) மற்றும் (II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் பதவிநிலை தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர்களின் வேதனங்களை மாற்றிய போது 29 உத்தியோகத்தர்களுக்காக 2009 சனவரி 01 முதல் 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 1,209,220 தொகையான சம்பளம் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் அடிப்படையில் ரூபா 156,684 தொகையான ஊழியர் சேமலாப நிதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக முன்னைய ஆண்டின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்ததெனினும் இது வரையிலும் அதனை செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பதவியணியினர் நிர்வாகம் | வெற்றிடங்களை நிரப்பாமை, நீண்ட காலமாக பதிற்கடமை சம்பளம் செலுத்துதல். |

| | | |
|---|---|---|
| (ஆ) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள் | உரிய முறையில் உத்தியோகத்தர்களை் தெரிவு செய்யாமை மற்றும் அங்கீகாரமின்றி படிகளை செலுத்துதல். |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | வாகனங்களை கையேற்காமை. |
| (ஈ) | ஒப்பந்த மற்றும் கொள்வனவு நடைமுறை | உரிய விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | இருப்புக் கட்டுப்பாடு | காலம் கடந்த மற்றும் செயற்பாடற்ற இருப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை மற்றும் புத்தகங்களை நாளதுவரையாக்காமை. |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிறுவகத்திற்கு சொந்தமான காணி மற்றும் வாகனங்களை உரிய முறையில் கையேற்காமை மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்களை ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தாமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2015 – டிசம்பர் 31ம் திகதியுடன் வருட இறுதிக்கான அடிப்படை விடயங்களின் வெளியீடுகள் சம்பந்தமான 1971 ம் இலக்க (சுற்றறிக்கை) 38 இன் நிதி விடயங்கள் 14 (2) (C) பந்தியில் உள்ளபடி கணக்காய்வு அறிக்கை.**

**தெளிவுபடுத்தல்.**

**2.1 அடிப்படை வெளியீடுகள் சம்பந்தமாக கருத்து தெரிவித்தல்.**

**2.2.1 இலங்கை அரச பிரிவின் வணிகத்தின் முன்னேற்றம்.**

**ஏற்றுக்கொள்ளல்.**

இலங்கை அரச பிரிவின் வணிக முன்னேற்றம் இல - 02 இன் படி செயற்படுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி 2016-12-31ம் திகதிய வருட இறுதிக்கான நிதிபந்தி வெளியிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**2.2.2 வணிக கணக்கீட்டின் முன்னேற்றம்.**

**ஏற்றுக்கொள்ளல்.**

2016இன் கணக்கீட்டு வருடத்திலிருந்து கணக்காய்வு அறிக்கையிலுள்ளபடி செயற்படு மாறு நிதிப்பிரிவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்துவதற்கு உதவிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதியுதவிச்சேவை) அவர்களிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடு**

61-6298 / G. V - 1823 வாகனங்கள் இரண்டு UNDP நிறுவனத்திடம் ஒப்படைக்கத் தேவையான விடயங்களை மேற்கொள்ள உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி 2016-11-15 ம் திகதி UNDP நிறுவனத்தின் விடுதியின் உதவியாளர்களிடம் இந்த வாகனத்தைப் பொறுப்பளிக்கும் அவசியம் ஏற்பட்டமை பற்றி அறிவிக்கப் பட்டுள்ளது. இந்தக் கடிதத்திற்குப் பதில் கடிதம் என்ற வகையில் 2016 நவம்பர் 17ம் திகதியிடப்பட்ட, நாடெங்கிலும் சகல நிறுவனங்களும் உட்படும் வகையில் அனுப்பப்பட்ட கடிதத்தின் ஊடாக தேசிய கல்வி நிறுவனம் தற்போது பாவிக்கும் 61-6298, G. V 1823 என்ற வாகனம் உரிய வாடகையைச் செலுத்தப் பெற்றுக்

கொண்டபடி UNDP நிறுவனம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 01) 2016 நவம்பர் 15ம் திகதிய கடிதத்திற்கு UNDP நிறுவனம் ஊடாக எதுவித பதிலும் கிடைக்கப் பெறாமையால் மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**2.2.4 விளக்கமளிக்காது மாற்றம் செய்தல்**

இதுபற்றி ஆரம்பக்கட்ட விசாரணை நடத்த மூன்று தனிநபர் கமிட்டி ஒன்று 2016-09-21ம் திகதி நியமிக்கப்பட்டது. இது சம்பந்தமான விசாரணை ஒன்று நடத்தப்பட்டு 3 வாரத்திற்குள் அறிக்கை வழங்குவதாக நிதி உத்தியோகத்தர் மூலம் 2016-10-10ம் திகதி கணக்காய்வும், முகாமைத்துவக் கமிட்டிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய அறிக்கை இதுவரையில் கிடைத்திருக்கும். (அனுப்பப்பட்டுள்ளது) அதன்படி இறுதி நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**2.3 கிடைக்க வேண்டியதும், செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

(அ) இந்தப்பணம் நட்டம் என்ற அடிப்படையில் குறிப்பிடுவதற்காக கல்வியமைச்சில் இணைந்து தேவையான மிகுதி நடவடிக்கைகளைச் செய்வதற்கு நிதிப்பிரிவு உத்தியோகத்தினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தப் பணத்திற்குரிய தகவலை 2016 நவம்பர் 30ம் திகதிக்கு முன்னர் வழங்கும்படி உரிய கட்சிகாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அன்றைய தினத்திற்குப் பதில் அளிக்காதவர்களின் பணம் 2016ம் ஆண்டு கணக்கில் வருமானமாகக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**2.4 சட்ட ஒழுங்கு விதிகளையும் முகாமைத்துவ தீர்மானங்களையும் பின்பற்றாமை.**

**(அ) 2015 மார்ச் 10ம் திகதியும் 03–2014 (1) இலக்கமும் கொண்ட அரச நிதிச்சுற்று நிருபம்**

2015-07-02ம் திகதியில் வெளியிடப்பட்ட இல 452 (1) எனும் நிருவாக சுற்றுநிருபம் 2016-10-20 ம் திகதி நடைபெற்ற இல: 407 நிறுவன சபையின் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி செல்லுபடியற்றதாக்கப்பட்டது. அந்த நிறுவனச் சபையின் தீர்மானப்படி 2016 அக்டோபர் 01ம் திகதியிலிருந்து அரச வர்த்தக சுற்று நிருபம் இல. PED/02/2015 இன்படி தேசிய கல்வி நிறுவகத்தின் உரிய உத்தியோகத்தர்களுக்குத் தொடர்பாடல் வசதிகளுக்கு உரிய பற்றுச்சீட்டுகளுக்குப் பணம் செலுத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவ்வேளை இருந்த பணிப்பாளர் நாயகமும் உதவிப் பணிப்பாளர் நாயகமும் (நிர்வாக நிதிச் சேவை) தற்போது நிறுவனத்தின் சேவையில் இல்லை. ஆகையால் மேலதிக மாகச் செலுத்தியுள்ள அந்தப்பணத்தை கைவிடுமாறும் நிறுவனச் சபை தீர்மானம் எடுத்தது.

**(ஆ) 2003 ஜூன் 02ம் திகதியிடப்பட்டதும் PED/12 இலக்கமும் கொண்ட அரச வர்தக சுற்றுநிருபம் 9.7, 9.8 பந்திகள்.**

இந்தக் கொடுப்பனவுக்குரிய நிதியமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள 2016-08-09ம் திகதிய வரவு செலவுத் திணைக்களத்திற்கு அனுமதி கேட்டுக் கடிம் அனுப்பப்பட்டதோடு 2016-11-21ம் திகதி அவர்களால் கூறப்பட்ட விடயங்களை ஆராய்வதற்காக 2016-12-08ம் திகதி பதில் அனுப்பப்பட்டது. (இணைப்பு - 2)

இதற்கான பதில் கிடைக்கப்பெறாத நிலையில் நினைவூட்டுகைக் கடிதம் அனுப்பும்படி ஆலோசனை கூறப்பட்டது.

**(இ) 2006 அரச நிதியொதுக்கீடு வழிகாட்டல் சஞ்சிகை 8. 9. 1 (ஆ)ம் பந்தி.**

ரூபா 500.000/= விரைவாக கொள்வனவு செய்யக்கூடிய விடயங்களில் நிதியொதுக்கீடு வழிகாட்டல் சஞ்சிகையின் 8.9.1 (ஆ) பந்தியின்படி எழுத்து மூலமான உடன்படிக்கை யில் கையொப்பமிடுவதற்கான வேலைகள் மேற்கொள்ள உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கொள்வனவு செய்வதற்கான எழுத்துமூல உடன்படிக்கை கையொப்பமிட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) 2010 செப்டம்பர் 06ம் திகதி நிதியொதுக்கீடு கையேட்டுக்கான மேலதிக 9.3.1 (ஆ) பந்தி.**

கணக்காய்வு அதிகாரியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின்படி நிதி யொதுக்கீடு வழிகாட்டல் சஞ்சிகையின் 9.3.1 (ஆ)ம் பந்தயின்படி ரூபா200.000/= க்கு மேற்படும் மோட்டார் வாகனத்திற்கும் உபகரணங்களை திருத்தம் செய்வதற்குமான செலவு சம்பந்தமாக கல்வியமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**3. அடிப்படை மகாநாடு (கலந்துரையாடல்)**

**3.1 அடிப்படை பெறுபேறு**
**ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**3.2 பங்களிப்பு**
**ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

**3.3 கலந்துரையாடல்**
**ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

## 3.4 நிறுவன

(அ)

1. திரு. அன்ரன் இவைீந்திர குமார் அவர்களின் வழக்கு.
   இந்த வழக்கின் 2ம் சாட்சிக்கெதிராக வழங்கப்பட்ட தீர்ப்பானது நீதிமன்றத்தின் பிஸ்கல் ஊடாக அனுப்பப்பட்டது. 2ம் சாட்சியாளர் அந்தச் சாட்சியாளர் குறிப்பிடப் பட்ட விலாசத்தில் இல்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி கடவத்தை பொலிஸார் மூலமாக தேடிப்பார்த்தபோது அவர் உரிய விலாசத்தில் வதியவில்லை என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. S. A. M. S.N. செனவிரத்ன அவர்களின் வழக்கு.
   இந்த வழக்கில் சாட்சியாளர் மூன்று பேர் வெளிநாடுகளில் வசிப்பதால் அவர்களின் சரியான விலாசத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் உள்ளதால் வழக்கு தற்காலிக மாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

3. திருமதி. B. K. விஜய குணவர்தன அவர்களின் வழக்கு.
   அவருக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4. திருமதி. K. W. P. A. வீரவர்தன அவர்களின் வழக்கு.
   இவருக்கெதிராக நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் இல 2320/16/M வழக்கு தொடரப்பட்டு தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

5. திருமதி. A. P. S. பதிரண அவர்களின் வழக்கு.
   இந்த வழக்கு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

6. S. M. சேனாநாயக்க அவர்களின் வழக்கு.
   இந்த உத்தியோகத்தருக்கெதிராக நுகேகொடை நீதிமன்றத்தில் இல 669/08/M வழக்கு தொடரப்பட்டுள்ளது.
   இந்த வழக்கு 2013 -08 -06ம் திகதி அழைக்கப்பட்ட போது இந்த உத்தியோகத்தர் அந்தத்தொகையை 5 வருடத்துக்குள் (தவணை 60) கட்டி முடிக்க ஒத்துக்கொண்டு வழக்கு நிறைவு பெற்றது.
   அதன்படி 2013-10-30ம் திகதி நடைபெற்ற உடன்பாட்டுக்கமைய S. M. சேனாநாயக்க அவர்களால் 2013-12-18ம் திகதியிலிருந்து 2016- 12- 19ம் திகதி வரை 540,345.41= ரூபாவான பணத்தொகை நிறுவனத்திற்குச் செலுத்தியுள்ளார். (ரூபா 14,603/ 93X தவணை 37) முதல் தவணையும் இறுதித் தவணையும் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 03)

(ஆ) உத்தியோகத்தர் 4 பேரால் நிறுவனத்துக்கு எதிராக 4 வழக்குகள் தொடரப் பட்டுள்ளன. தொழிலாளர் தீர்ப்புச்சபை - B. R. M. தயானந்த

இவரால் ரூ. 36000/= ஆரம்ப ஊழல் சம்பந்தமாக முறையான ஒழுங்கு விசாரணை நடத்தப்பட்டு அதன்படி குற்றவாளி என்ற அடிப்படையில் சேவையின் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். வழ. இல M. H./33/208/04 வழக்கு நிறுவனத் துக்கு எதிராகத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தொடரப்பட்டவர் B. R. M. தயானந்த அவர்கள் சுற்றவாளியாகக் காணப்பட்டதோடு மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ள நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளதால் அவர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு நட்டஈடும் வழங்கப்பட்டுள்ளது.

M. K. D. தேசப்பிரிய

இவர் தொழிலாளர் நீதிச்சபையின் M. H 33/1179 /14 என்ற இல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட கலந்துரையாடல்படி தேசிய கல்வி நிறுவகம் 2015 - 07- 13ம் திகதி நடத்தப்பட்ட 398 வது நிறுவன மகாசபைக் கூட்டத்தின் அனுமதியின்படி 2015-08-04ம் திகதி அவர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட தோடு அவரது சேவைக்காலம் முழுவதும் சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நில்மினி விக்கிரமசிங்க

தேசிய கல்வி நிறுவகத்தின் புத்தக நிலையத்தின் தினசரி விற்பனைகளில் 2009ம் ஆண்டின் காலப் பகுதிக்குள் ரூபா. 549, 772. 50 பணத்தினை தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக முறையான ஒழுக்காற்றுப் பரீட்சனை நடத்த தீர்மானத்தின்படி குற்றவாளியானபடியால் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் இல M. H 33/1005 /11 என்ற வழக்கினை நிறுவனத் திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

தற்போதுள்ள நிலைமை

இந்த வழக்கு தற்போது விசாரணை நடைபெறுகிறது.

WP/ HCCA/ MT/ 12/2012 RA - சிவில் நீதிமன்றம் கல்கிசை K. D. L. ராணி தேசிய கல்வி நிறுவனத்தினூடாக நடத்தப்பட்ட தொலைக்கல்விப் பயிற்சி பாடநெறி முழுமையாக முடிக்கப்படாமல், சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் நிறுவனத்திற்கு எதிராக முறைப்பாட்டு மன்றத்தில் 11/ 2007 இலக்க வழக்கினை தாக்கல் செய்யப்பட்டது. எனினும் அவரது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது. மீண்டும் அவர் நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தில் இல SPL/125 /09 இலக்க வழக்குத் தொடரப்பட்டாலும் அதுவும் நிராகரிக்கப்பட்டது.

அவர் மீண்டும் இதுபற்றி கல்கிசை சிவில் முறைப்பாட்டு நீதிமன்றத்தில் மேற்படி இலக்க வழக்கு தொடரப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை

இந்த வழக்கு தற்போது விசாரணைக்குட்படுத்தப்படுகிறது. இதன் அடுத்த தவணை 2017-01-25 ஆகும்.

**4. கலந்துரையாடல்**

**4.1 தரங் கணிப்பீடு**

(அ) மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் ஊடாக பயிற்சியாளர்கள் 120 பேர் பயிற்சியளிக்கப்பட்டு ஏயை மாகாணங்களிலும் 477 பயிற்சியாளர்கள் பயிற்சியளிக்கப் பட்டுள்ளனர். இதன்படி 597 பேர் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) ஆரம்பக் கல்விப் பிரிவிற்குரிய விடயங்களில் கிடைக்கப்பெற்ற சிறுவர் அபிவிருத்தியின் உயர்ச்சி ஆய்வு செய்யப்பட்ட அறிக்கைகள் 2016-11-10ம் திகதி பீடாதிபதி உதவிப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(இ) மாணவர் தொகை 24 பேர்களில் 24 பேரையும் ஆய்வு தலைப்புகளினை அனுமதிக்கும் பொழுது கணிப்பீடு செய்து அதற்கான புள்ளி பரீட்சைத் திணைக்களத்திற்கு ஒப்படைத்து உரிய விடயம் நிறைவு செய்யப்பட்டது.

கற்கை நெறிக்காக வருகை தந்திருக்கும் மாணவர் 14 பேர் மட்டுமே. இருவர் கற்கை நெறிக்கு வருகை தரவில்லை. இதன்படி வந்திருந்த 14 பேரின் செயற்றிட்ட அறிக்கை 14கும் கணிப்பீடு செய்யப்பட்டு புள்ளியிடப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இப்பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 100% இலக்கு அடையப்பட்டுள்ளது.

(ஈ) இந்த வருடத்தில் போதுமானதும் தரமானதுமான கடிதங்கள் கிடைக்காதபடியால் இந்த ஆய்வு சஞ்சிகை மூன்றினை வெளியிடுவதற்கு முடியாமல் போனதோடு ஆய்வு மகாநாட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதங்களில் மூன்று விநியோகிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடு**

(அ) கணக்காய்வு அறிக்கையின் 2.2.3 இன் கீழ் காணப்பட்ட விடயங்கள் இதற்கு பொருந்தும்.

NA - 7574 வாகனம் தேசிய கல்வி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வியமைச்சிடம் 2016-02-11ம் திகதியும் 2016-10-06ம் திகதியும் கடிதம் அனுப்பப்பட்டது.

(ஆ) இந்த கற்கை நெறியில் கற்றல் செயற்பாடுகளின் படிமுறை ஆரம்ப கட்டமானது தொலைக்கல்வி படிமுறையைப் போல் நடைபெறும்.

அதன்படி உரிய கற்கை நெறியிலே கற்கை நெறியைப் பின்பற்றுபவர்களின் கற்றல் செயற்பாடு வீட்டிலிருந்து செயற்படுவது சம்பந்தமாக உரிய பல்கலைக்கழகங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள பணிப்பாளர் (வெளிவாரி சம்பந்தமான) இடம் ஆலோசனை வழங்குவதோடு அதில் கிடைக்கும் விபரத்தின்படி அடுத்த கட்டம் எடுக்கப்படும்.

(இ) பரிபாலன சபைக்கு யுனெஸ்கோ அங்கத்த நாடுகளின் பிரதிநிதிகளும் இலங்கையில் பிரதிநிதிகளை நியமனம் செய்யவும் கல்வியமைச்சின் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற சிரேட்ட முகாமைத்துவ கூட்டங்களிலும் கவனமெடுத்து நியமனங்களும் நடைபெற்றது. பரிபாலன சபையின் முதல் கூட்டம் 2017 மார்ச் மாதம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி கல்வியமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களும் ஆலோசகர்களும் நியமனம் செய்தபின் மத்திய நிலையத்தின் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

(ஈ) மகரகம, பாதுக்க பிரதேச செயலாரளிடம் தேவையான விபரங்கள் வழங்கி நிலம் பொறுப்பேற்பதற்கான செயற்பாடுகள் நடைபெற உதவிப்பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம், நிதி, உதவிசேவை) இடம் ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதன்படி மகரகம பிரதேச செயலாளரிடம் 2016-11- 23ம் திகதி கல்வி செயலாளரிடம் அனுப்பப்பட்ட கடிதத்தின்படி விஷேட அமைச்சர் குழுவினரின் அனுமதியூடாக இந்த காணி பொறுப்பேற்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 2016-12-16ம் திகதிய கல்வி செயலாளர் கடிதம் ஊடாக அதுபற்றிய தேவையான ஒழுங்குகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. (இணைப்பு - 4)
மீப்பே சுற்றாடலில் அமைந்துள்ள காணி சம்பந்தமாகப் பாதுக்க பிரதேச செயலாளர் மூலம் இக்காணி அரச கசற் அறிவித்தலின் பிரதி கேட்கப்பட்டதால் அப்பிரதி வழங்கப்பட்டது. (இணைப்பு - 5)

(உ) 2 மாடி விடுதியின் மலசலகூட தொகுதியை அமைப்பதற்கான நடவடிக்கையின்படி பொருளாளரினால் அதற்கான நிதியொதுக்கீடு வழங்காததால் கட்டுமாணப்பணியை ஆரம்பிக்க முடியாமல் போனது.

### 4.3 மத பேதத்திற்கு பிரச்சினை

இது சம்பந்தமாக D. M. N. J. திசாநாயக்க அவர்களிற்கு 2016-09-14ம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி D. M. N. J. திசாநாயக்க அவரினால் 2016-10-11ம் திகதி ரூ. 140.000 பணத்தொகை திருப்பி செலுத்தப்பட்டுள்ளது. (இணைப்பு - 6)

### 4.4 கட்டணங்களும் உபயோகங்களும்

இந்த நிதியொதுக்கீட்டுப் பணத்தைப் பயன்படுத்துவதற்காக ஒரு உத்தியை பாரம்பரிய குழுவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

### 4.5 மத பேதத்திற்கு பிரச்சினை

(அ) மாலைதீவு அதிபர்கள் மற்றும் கல்வியியலாளர் குழுவினர் மூன்றுக்கான தற்போது கற்கைநெறி நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஒழுங்கமைக்க வுள்ள கற்கைநெறி ஊடாக இந்த கட்டிடமும் அதற்குரிய உபகரண பாவிப்பதற்கு தேவையான ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது.

(ஆ) இனி வருங்காலத்தில் திட்டமிட்டு செயற்படுவதற்கு கட்டியெழுப்பப்பட்ட கசட் (C.D) முறையாகப் பங்கிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### 4.6 Contract செயல் ஒழுங்கு

கட்டுமானங்களில் உள்ள குறைபாடுகள் Contract மூலம் முழுமை படுத்தப்பட்டுள்ளது. ஆலோசனைச் சேவை நிறுவனத்தின் மூலம் உரிய சான்றிதழ் பெறப்பட்டது.

### 4.7 உத்தியோகத்தரின் பரிபாலனம் (நிர்வாகம்)

(அ) 2016ம் ஆண்டில் 110 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அனுமதி பெற்றுத் தரும்படி 2016-09-23ம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்ட தோடு முகாமைத்துவத் சேவைத் திணைக்களத்தினூடாக 79 பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு 2016-09-30ம் திகதி அனுமதியளிக்கப்பட்டது. அனுமதியளிக்கப்பட்ட பணிப்பாளர் பதவி 09 இல் 02 மட்டும் 2016-12-01ம் திகதி நிரப்பப்பட்டதோடு மேலும் 3 பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நிறைவு செய்யப்பட்டது. மிகுதி பதவி 04 இற்காக விண்ணப்பம் கோரப்பட திட்டமிடப்பட்டுள்ளது. (இணைப்பு- 07)

சிரேட்ட விரிவுரையாளர் பதவி 21 இற்கான உள்ளக விண்ணப்பம் கோரப்பட்டதோடு விண்ணப்பங்கள் 46 கிடைக்கப்பெற்றது. இதற்கான நேர்முகப் பரீட்சை 2017 ஜனவரி 16ம் திகதி நடத்த தீர்மானிக்கப்பட்டதோடு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பம்

உள்ளக ரீதியாக கோர தீர்மானிக்கப்பட்டது. உதவி விரிவுரையாளர் பதவி 25 இனை நிரப்புவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றதோடு அதனை வெளிப்படுத்துவதற்கான பத்திரிகை அறிவித்தல்படி விண்ணப்பம் 3643 கிடைக்கப் பெற்றது. 2017 ஜனவரி மாதத்திற்குள் இந்த நேர்முகப் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டது.

(ஆ) இதற்கான விடையும் மேற்பட்டதே.

(இ) வெற்றிடங்களை நிரப்புவதற்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களம் அனுமதி வழங்க தாமதித்தமையால் நிறுவகத்தில் வெற்றிடம் நிலவுவதாக சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தில், பதவிகளுக்கான கல்வி - செயலாளரின் மூலம் அவ்வப் போது கல்வி நிருவாகச் சேவை உத்தியோகத்தர் தற்காலிகமாக நியமிக்கப்பட நேர்ந்தது. தற்போது பணிப்பாளர் நாயகங்களில் இருவருக்கான வெற்றிடம் நிரப்பு வதற்கான அனுமதி கிடைக்கப் பெற்றதால் அதன்படி மிகுதி வேலைகளும் நடைபெறும்.

(ஈ) வெற்றிடம் நிலவும் பணிப்பாளர் (நிதி) பணிப்பாளர் (பொறியியல் சேவை) பதவிகளுக்காக 2016 - 12- 01ம் திகதியிலிருந்து புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பணிப்பாளர் மூவருக்கு உரிய நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. பகுதித் தலைவர் பதவிக்கு உரிய பிரிவுகளில் செயற்படுவதற்காக அவற்றிற்குரிய பணிப்பாளர் நாயகத்தினூடாக வழங்கப்பட்டதோடு இது சம்பந்தமாக எவ்வித மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது.

(உ) உதவி விரிவுரையாளர் பதவி 25 இனை நிரப்புவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்காக பத்திரிகையின் அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் 3643 கிடைக்கப்பெற்றது. 2017 ஜனவரி மாதம் இந்த நேர்முகப் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஊ) முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அனுமதியின்படியான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

## 5. கணக்கு விடயங்களின் தன்மையும் நல்லநிர்வாகமும்

### 5.1 பாதீட்டு அறிக்கைகள் நிர்வாகம்

பாதீட்டு எஸ்டிமேட் தயாரித்தலின் போது செலவுப் பகுதியில் உள்ளவை எல்லாம் மகா பொருளாளர் சுற்றுநிருபத்தின் படியேயாகும். இதன் பொருள் அதாவது நிறுவகத்தின் ஆரம்ப அறிக்கையில் வகைப்படுத்தல் வேறுபடுவதனால் கணக்காய்விற்கு பிழையற்ற விவரங்கள் அறிக்கைப்படுத்தப்படவில்லை. ஆகவே அதிகமாக காட்டப் படுகிறது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வரையான 24 %- 1647% செலவுக்குரிய கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதோடு, விளக்கமளித்தலின் போது விவரங்கள் இணைப்பு -08 இன் ஊடாக அனுப்பப்பட்டுள்ளது. ((முன்வைக்கப்பட்டுள்ளது)

நிறுவனத்தின் திட்டமிடல் பாதீடு எஸ்டிமேட் மற்றும் உண்மையான செலவு மாதாந்தம் மேற்பார்வை செய்யும் போது நிறுவனத்தின் முன்னேற்றமும், தடைதாண்டல்களை அதிகப்படுத்தவும் திட்டமிடுதல், பணம் மற்றும் கணக்காய்வுப் பிரிவுகளில் உள்ள உத்தியோகத்தர்களின் உள்ளக அடிப் முகாமைத்துவ குழுவினர் ஒன்றை (கமிட்டி) அமைத்து அதன்படி மாதாந்தம் ஆரம்ப முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்வதற்கும் அறிக்கை சமர்பிப்பதற்கும் சரியானவையாக உள்ளவைகளைக் கொண்டு நல்ல ஒரு அடிப்படை நிர்வாகத்தை நடத்திச் செல்லவும் வெற்றிகரமான பௌதீக விருத்தியைப் பெற்றுக் கொள்ளவும் இதுவரையும் திட்டமிடப்பட்டுள்ளது.

**5.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பகுதிகள்**

ஓய்வு பெற்றுச் சென்றவர்கள் மற்றும் விலகிச் சென்ற சேவையாளர்களின் வாழ்க்கைச் செலவு (நுகர்ச்சிச் செலவு) கொடுப்பனவு வழங்கும் போது மேலதிகமாகக் கொடுக்கப் பட்ட சம்பளத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காகவும் உரிய நுகர்ச்சிக் கொடுப் பனவுப் பணத்தைக் கணக்கிடும் போது உரிய பணம் குறைவாக வழங்கப்பட்டு மீதியே வழங்கப்பட்டுள்ளது.

சேவையிலிருந்து விலக்கப்பட்ட சேவையாளர்களுக்கு இறுதியாகப் பணம் வழங்கும் போது அதிகமாக வழங்கப்பட்ட சம்பளம் கழிக்கப்பட்டே மீதி வழங்கப்பட்டது. சேவையாளர்களின் E.P.F கட்டணம் அதிகமாக கழிக்கப்பட்ட ஓய்வு பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களுக்கு பணம் திருப்பிச் செலுத்தும்படியான கடிதம் 2014-1--14ம் திகதி அனுப்பப்பட்டதோடு அதற்கான பதில் கிடைக்காமையால் 2016-09-21ம் திகதி மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

மேலதிகமாக வழங்கப்பட்ட பணம் உரிய உத்தியோகத்தர்களிடம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**6. செயலொழுங்கும் பரிபாலனமும்**

**(அ) செயற்குழு பரிபாலனம்**

தேசிய கல்வி நிறுவகத்திடம் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் சிறப்பாக நடைபெறச் செயற்குழுவினர் போதுமானதாக இல்லாததால் பெரிய சிக்கல் ஏற்பட்டுள்ள தோடு புதியவர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்படுவதாலும் விரைவாக பொருத்தமான ஆட்சேர்ப்புக்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) **வெளிநாட்டு, உள்நாட்டுப் பயிற்சிகள்**

வெளிநாட்டு, உள்நாட்டுப் பயிற்சிகளுக்கான செயற்குழுவினை அபிவிருத்தி திட்டமிடலுக்கமைய மேற்படி விடயங்கள் நடைபெற்றாலும் முன்னர் அந்தப் பணிகள் செவ்வனே இடம்பெறாமையும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. மீண்டும் இந்தச் செயலொழுங்கினை சரியான நிலைமைக்குக் கொண்டுவர முறையான திட்டமிடலின்படி செயற்குழுவின் பணியினை அபிவிருத்தி செய்யும் உரிய சுற்றுநிருபத்தின்படி கற்றலுக்கான லீவு வழங்கவும் நடவடிக்கை எடுப்பதாகத் தயவுடன் அறியத்தருகிறேன்.

(இ) **வாகன பரிபாலனம்**

நிறுவனம் நிரந்தரமாகவே 9 மாகாணங்களுடனும் இணைந்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதோடு தற்போது நிலவும் வாகனப் பாவனையானது முறையாக பயணம் செய்தலுக்காகவும் திருத்த வேலைகளைச் சுற்றுநிருபத்துக்கமைய பிழையற்ற பரிபாலனத்தைச் செய்யும்படியும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாகனத்தைப் பொறுப்பேற்பதற்குத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ள உரிய உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இனி வருங்காலத்தில் திட்டமிட்டு செயற்படுவதற்கு கட்டியெழுப்பப்பட்ட கசட் (C.D) முறையாகப் பங்கிடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(இ) Contract நிதியொதுக்கீடு

நிறுவனத்தின் வருடாந்த திட்டமிடல் தயாரிக்கும் போது பல்வேறு திணைக்களங்களில் நிலவும் தேவைப்பாடுகள் கணக்கெடுக்கப்பட்டு அதனடிப்படையில் நிதி ஒதுக்கீடு திட்டமிட்டு முறையாக நிதி வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

(உ) மொத்த பரிபாலனம்

மொத்த பரிபாலனம் முறையாக நடத்திச் செல்ல உரிய உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஊ) நிரந்தர சொத்துக்களின் பரிபாலனம்

நிறுவனத்துக்குச் சொந்தமான காணி, வாகனம் ஒழுங்காக முறையாகப் பேணப்பட்டு சிறப்பாக உபயோகம் செய்யவும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல், ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கலாநிதி T. A. R. J. குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்.

ඇමුණුම

# ජාතික අධ්‍යාපන ආයතනය
# தேசிய கல்வி நிறுவகம்
# NATIONAL INSTITUTE OF EDUCATION


තැ.පෙ. 21, හයිලෙවල් පාර, මහරගම
த.பெ. 21, ஹைலெவல் வீதி, மகரகம
P.O. Box 21, High Level Road, Maharagama, Sri Lanka


අපේ යොමුව: / எமது கோவை: / Our Reference: NIE/Transport/2011/GEN/20

ඔබේ යොමුව: / தங்கள் கோவை: / Your Reference:

දිනය: / திகதி: / Date: 2016.11.15

Resident Representative
United Nations Development Programme
202/204, Bullers Road
Colombo 07

Dear Sir / Madam,

**Vehicle No s 61-6298 & GV 1823**

The above vehicles have been using by National Institute of Education for the last 15 years.

As it is a property owned by UNDP there is a necessity to hand these vehicles over to you, the registered owner of these vehicles though these have been maintaining and utilizing by NIE during the last 15 years.

Due to the fact that these two vehicles are farely old and not suitable to be used at a diplomatic mission, we wish to suggest you to permit us to keep the vehicles at NIE until such time the vehicles are not suitable to run in roads, which time we can hand it over to you to discard officially from your inventories.

We would be grateful to you if you could accept this suggestion to allow us to keep the two vehicles at NIE for the use of development activities of children in Sri Lanka as the fleet of vehicles at NIE at present is not sufficient to achieve the expected goal.

17/11/2016
Jayamini Senevirathna
UNDP

Dr. (Mrs.) T.A.R.J. Gunasekara
Director General

Dr. (Mrs.) T. A. R. J. Gunasekara
Director General
National Institute of Education
Maharagama - Sri Lanka.

ඇමුණුම 01

**United Nations Development Programme**

17th November 2016

Ref : UNDP/TRA/A-040_A-059

Dear Sir/Madam,

**Ref: Transfer of Vehicles under United Nations Development Programme (UNDP) Ownership**

The United Nations Development Programme (UNDP) Country Office in Sri Lanka wishes to bring to your kind attention that the following vehicle(s) have been handed over to your organization's custody for UNDP funded project activities which were carried out in the past. Our records also indicate that such vehicles are still registered in the name of the Resident Representative, UNDP and continues to be used by your organization.

The relevant registration number(s) are: 61-6298,WP GV-1823

We have officially written to you on this subject in a letter dated 11th November 2014 and is attached herewith for your reference. Further, you have also confirmed that the said vehicles are under your organization's custody and had agreed to the settlement of all applicable duties and have the vehicles transferred in your organizations favor.

However, as of November 2016 we would like to bring to your kind attention that such transfers remain pending and incomplete and the ownership remains under the United Nations Development Programme (UNDP) while the custodian of the vehicle continues to remain with your organization.

The UNDP in Sri Lanka wishes to work in close collaboration with your organization towards successful transfer of the above vehicles. We hereby attach the latest Sri Lanka Ministry of Foreign Affairs Circular (TPN No. PR/551/2016) which outlines the ***Method of Duty Calculation for the Vehicles Imported under duty Free Basis on CIF Value***. Please be guided by this circular in estimating the duties payable for the UNDP vehicle(s) currently in your custody and make the necessary arrangements for such settlements.

We hereby seek your kind assurance that such duties are settled on an urgent basis and have the vehicles transferred prior to 31st January 2017. We remain committed to assist you in the transfer formalities once such duties have been settled in full. In the event of your organizations inability for such settlements, the UNDP wishes to retain the custody of the above vehicle(s) and please notify us to the undersigned by 15th December 2016 to enable such returns back to UNDP.

Thanking you

Sincerely,

UNITED NATIONS COLOMBO - SRI LANKA

Joern Soerensen
Country Director

Director (Engineering Services)
National Institute of Education
P.O.Box 21
High Level Road
Maharagama

Attention: Mr. P.G.R.C. Piyadasa



202-204, Bauddhaloka Mawatha. Colombo 7, Sri Lanka ■ P.O. Box 1505 ■ Cable: UNDEVPRO COLOMBO
Tel: +94(11)2580691-8 ■ Telex: 21210 UNDP CE ■ Fax: +94(11)2581116 ■ Email: registry.lk@undp.org

අමුණුම 02

(1067)


ජාතික අධ්‍යාපන ආයතන
தேசிய கல்வி நிறுவகம்
NATIONAL INSTITUTE OF EDU

තැ.පෙ. 21, හයිලෙවල් පාර, මහරගම
த.பெ. 21, ஹைலெவல் வீதி, மஹரகம
P.O. Box 21, High Level Road, Maharagama, Sri Lanka


මගේ යොමුව: / எனது இலக்கம்: / Our Reference: NIE/ERMU/FA/424/III

ඔබේ යොමුව: / உமது இலக்கம்: / Your Reference:

දිනය: / திகதி: / Date: 09.08.2016

ලේකම්

අධ්‍යාපන අමාත්‍යාංශය මඟින්,

ලේකම්

මුදල් අමාත්‍යාංශය,

මහලේකම් කාර්යාලය,

කොළඹ 01.

**<u>දර්ශනශූර් උපාධි පාඨමාලාව හදාරන නිලධාරීන්ට මාසික අධ්‍යයන දීමනාව ගෙවීමට අනුමැතිය ලබා ගැනීම</u>**

ජාතික අධ්‍යාපන ආයතනයේ නිලධාරීන් දස දෙනෙකු මැලේසියාවේ විද්‍යා හා කළමනාකරණ විශ්ව විද්‍යාලයේ දර්ශනශූර් උපාධි පාඨමාලාට හැදෑරීම සඳහා ජාතික අධ්‍යාපන ආයතනය විසින් 2014 වසරේ තෝරා ගන්නා ලදී.

තේරී පත් වූ නිලධාරීන් හතර දෙනෙකු මැලේසියාවේ විද්‍යා හා කළමනාකරණ විශ්ව විද්‍යාලයේ දර්ශනශූර් උපාධි පාඨමාලාව හදාරමින් සිටියි.

අනෙකුත් නිලධාරීන් 06 දෙනා කොළඹ කොල්ලුපිටියේ පිහිටි විද්‍යා හා කළමනාකරණ විශ්ව විද්‍යාලයට අනුබද්ධ (කොළඹ පිහිටි අධ්‍යාපන මධ්‍යස්ථානයේ) (City Campus) සිට දර්ශනශූර් උපාධි පාඨමාලාව හදාරමින් සිටියි.

මැලේසියාවේ විද්‍යා හා කළමනාකරණ විද්‍යාලයේ දර්ශනශූර් උපාධිය හදාරන නිලධාරීන් 04 දෙනා සඳහා සියලුම වියදම් වසර 02 ක් සඳහා අයවැය ඇස්තමේන්තුව අනුව අදාළ විශ්ව විද්‍යාලයට ජාතික අධ්‍යාපන ආයතනය විසින් බැර කරන ලදී.

ලංකාවේ කොළඹ City Campus සිට අධ්‍යයන කටයුතුවල නිරත වන නිලධාරීන් 06 දෙනා සඳහා අයවැය ඇස්තමේන්තුව අනුව

01. අයදුම්පත් ගාස්තු
02. ලියාපදිංචි ගාස්තු
03. පාඨමාලා ගාස්තු
04. නිබන්ධන හා විභාග ගාස්තු




දුරකථන / தொலைபேசி / Telephone (+94) 011 7601601
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (011) 7601800 (011) 7601700
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website www.nie.lk
ඊ-මේල් / ஈ-மெயில் / E-mail info@nie.lk

1066

විද්‍යා හා කළමනාකරණ විශ්ව විද්‍යාලයට ජාතික අධ්‍යාපන ආයතනය විසින් බැර කරන ලදී. මාසික අධ්‍යයන වියදම් දීමනාව එම නිලධාරීන් 06 දෙනාට මාසිකව US $ 150 බැගින් ලබා දෙන ලදී. එම නිලධාරීන් 06 දෙනා සඳහා මාසික අධ්‍යයන වියදම් දීමනාව අයවැය ඇස්තමේන්තුවට ඇතුළත් කර ජාතික අධ්‍යාපන ආයතනයේ ආයතන සභාව විසින් අනුමත කර ඇති අතර ආයතන සභාවේ සභාපති වන්නේ අධ්‍යාපන අමාත්‍යාංශයේ ලේකම්වරයා ය. (ඇමුණුම 1 - a, 1 - b, 1 - c, 1 - d, 1 - e, 1 - f) මෙම වැඩසටහන සඳහා මුදල් ලබා දෙන ලෝක බැංකු ව්‍යාපෘතියෙන් විරෝධතාවක් නොමැති බැවින් (No Objection) ලබාගෙන ගෙවීම් සිදු කර ඇත. (ඇමුණුම 2)

එහෙත් විගණකාධිපති දෙපාර්තමේන්තුව මගින් EDU/C/NIE/01/2015/07 දරන 2016 පෙබරවාරි 09 දින විගණන විමසුම මගින් පි ර ඩී අංක 12 හා 2013 ජූනි 02 දිනැති රාජ්‍ය ව්‍යාපාර චක්‍රලේඛයේ 9.7 හා 9.8 ඡේද අනුව යම් දීමනාවක් ලබා දීමේ දී මුදල් අමාත්‍යාංශ ලේකම්තුමාගේ අනුමැතිය ලබා ගත යුතු බව සඳහන් කර ඇත.

මෙම විගණන විමසුම නිසා මෙම නිලධාරීන් 06 දෙනාගේ මාසික අධ්‍යයන දීමනාව 2016 ජනවාරි මස සිට ගෙවීම් ආයතනය විසින් නතර කර ඇත.

ආයතනය විසින් ලබා දුන් මාසික අධ්‍යයන වියදම වැය කොට ඇත්තේ පහත සඳහන් වියදම් දැරීම සඳහා ය.

01. දත්ත රැස් කිරීම.
    (ප්‍රශ්නාවලි සකස් කිරීම සහ මුද්‍රණය, ප්‍රශ්නාවලි බෙදා හැරීම, සම්මුඛ සාකච්ඡා පැවැත්වීම, දත්ත රැස් කිරීම.)
02. අවසන් පරීක්ෂණයට පෙර මැලේසියාවේ සිටින උපදේශකවරුන් හමු වී උපදෙස් ලබා ගැනීම.
03. අවසන් පරීක්ෂණයට පෙර පර්යේෂණ පත්‍රිකා පිළිගත් අන්තර් ජාතික සඟරා වල පළ කිරීම.
    (අවම වශයෙන් පත්‍රිකා 3 ක් පල කළ යුතු අතර එක් පත්‍රිකාවක් සඳහා අවම වශයෙන් ඇමරිකානු ඩොලර් 100 ක් පමණ වැය වන අතර මෙම මුදල පළ කරනු ලබන සඟරාවට අනුව වෙනස් වේ.)
04. පර්යේෂණ වාර්තාවේ සෝදුපත් පරීක්ෂාව සඳහා විශ්ව විද්‍යාලය මගින් අනුමත කර ඇති ස්ථානයක් වෙත යොමු කිරීම.
    පර්යේෂණ වාර්තාව භාෂා සංස්කරණය සඳහා විශ්ව විද්‍යාලය විසින් අනුමත ස්ථානයකට යොමු කිරීම.
05. අධ්‍යයන කටයුතු සඳහා අවශ්‍ය අතිරේක පොත් පත් සඟරා, ලිපි ද්‍රව්‍ය මිලදී ගැනීම හා වෙනත් පර්යේෂණ පත්‍රිකා ආදිය අන්තර්ජාලය හරහා බාගත කිරීම සහ මුද්‍රිත පිටපත් ලබා ගැනීම.
06. විශ්ව විද්‍යාලය මගින් පවත්වන අතිරේක වැඩමුළු සහ සම්මන්ත්‍රණ සඳහා සහභාගි වීම.
07. අවසාන පර්යේෂණ වාර්තාව සකස් කිරීම (Binding of Thesis) සහ අවශ්‍ය පිටපත් සංඛ්‍යාව මුද්‍රණය කිරීම.
08. අවසන් නිබන්ධනයේ Plagiarism පරීක්ෂා කිරීම සඳහා මෘදුකාංගයක්ට යොමු කිරීම සඳහා වන වියදම්.

මෙම නිලධාරීන් 06 දෙනා දර්ශනශූරී පාඨමාලාව හැදෑරීම ලබා දුන් මාසික අධ්‍යයන දීමනාව 2016 ජනවාරි සිට ජාතික අධ්‍යාපන ආයතනයෙන් නොගෙවීම නිසා එම නිලධාරීන්ගේ දර්ශනශූරී පාඨමාලාවේ වියදම් පියවා ගැනීමට සහ පාඨමාලාව හැදෑරීමට එම නිලධාරීන්ට දැඩි දුෂ්කරතාවලට මුහුණ දීමට සිදුවී ඇත.

මෙම නිලධාරීන්ගේ වෘත්තිය දියුණුව ආයතනයේ ඉදිරි කටයුතුවල සාර්ථකත්වයට බෙහෙවින් ඉවහල් වනු ඇත. එබැවින් මෙම මාසික අධ්‍යයන වියදම් දීමනාව 2016 ජනවාරි සිට ගෙවීමට ඔබතුමාගේ අනුමැතිය ලබා දෙන මෙන් කරුණාවෙන් ඉල්ලා සිටිමි.

ආචාර්ය ඩී. ජී. ආර්. ජේ. ගුණසේකර
අධ්‍යක්ෂ ජනරාල්

# ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
## தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
## DEPARTMENT OF NATIONAL BUDGET

මහා භාණ්ඩාගාරය, මුදල් අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01, இலங்கை.
General Treasury, Ministry of Finance, Colombo 01, Sri Lanka.

Web Site : www.treasury.gov.lk e-mail : budget@nbd.treasury.gov.lk


(104

මගේ අංකය / எனது இல. / My No. BD/HRD/126/09/2016  ඔබේ අංකය / உமது இல. / Your No.  දිනය / திகதி / Date 2016.11.21

ලැබුණා
2570
25 NOV 2016
අධ්‍යක්ෂ ජනරාල් කාර්යාලය

අධ්‍යක්ෂ ජනරාල්
ජාතික අධ්‍යාපන ආයතනය

අධ්‍යක්ෂ ජනරාල්තුමියනි

